# பாதுகாவலன்

PATHUKAVALAN


**இவ்வார விநியோகம்**

| | |
|---|---|
| பாஷையூர் பங்கு | 303 |
| யாழ். சென் ஜேம்ஸ் | 300 |
| அச்சுவேலிப் பங்கு | 260 |
| பருத்தித்துறைப் பங்கு | 260 |
| கரம்பொன் பங்கு | 253 |
| இளவாலை பங்கு | 251 |
| யாழ், பேராலயம் | 230 |
| சில்லாலைப் பங்கு | 225 |
| பண்டியன்தாழ்வு பங்கு | 175 |
| மண்டைதீவு பங்கு | 173 |
| மன்னூர் பேராலயம் | 150 |
| ஆனைக்கோட்டை பங்கு | 135 |


மலர்: 115 இதழ்: 21 26—5—1989 (மே 26 — யூன் 2) ரூபா 1-50 இலங்கையின் ஓரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு



Periodicals Division 1989 4


'வத்திக்கான் நியமித்த ஆயர்கள் மூலம் நன்மையடைய முடியும்'—சீன தேசப்பற்று கத். சங்கம்

# சீனாவில் மருத்துவ மனைக்கு திருச்சபை 25 லட்சம் அமெரிக்க டொலர் உதவி

**கொம்யூனிச புரட்சியைத் தொடர்ந்து சீனாவில் கத். திருச்சபை தடைசெய்யப்பட்டிருந்தது. 1958இல் சீன தேசப்பற்று கத். சங்கம் (Chinese Catholic Patriotic Association) உருவாக்கப்பட்டு சீன அரசு தாமே திருச்சபை ஆயர்களை நியமித்து வந்தது. எண்பதுகளில் சீனா ஆரம்பித்த திறந்த கொள்கையைத் தொடர்ந்து வத்திக்கான் நியமித்த ஆயர்கள் சீனாவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். இந்த ஆயர்களால் சீனா பொருளாதார நன்மைகளைப் பெறுவதை தேசப்பற்று சங்கம் பாராட்டி வரவேற்கின்றது.**

நீண்ட காலமாக வெளிநாடுகளுடன் தொடர்பைத் துண்டித்திருந்த சீன அரசு 1980-களில் திறந்த கொள்கைகளை அமுல் படுத்தியதைத் தொடர்ந்து சீனாவில் பலவிதமான முன்னேற்றகரமான மாற்றங்கள், புனர்நிர்மாண வேலைகள் நடைபெற்று வருகின்றன.

வத்திக்கானுடன் தொடர்புகளைத் துண்டித்த நிலையில் இயங்கிவந்த சீன தேசப்பற்றுள்ள கத்தோலிக்க சங்கம் இப்போது வத்திக்கான் நியமித்த ஆயர்கள் மூலம் சீனா நன்மையடைய முடியும் எனக் கூறி வருகிறது.

வத்திக்கான் நியமித்த கத். ஆயர் மத்தியாஸ் டுவான் யின்மிங் சீனாவின் தென்மேற்கு சிசுவான் மாகாணத்தில் எட்டு மாடிகளைக் கொண்ட மருத்துவ மனை அமைப்பதற்கு 25 லட்சம் அமெரிக்க டொலர்களை இத்தாலியிலிருந்து பெற்றுள்ளார்.

சீனா, வத்திக்கானுடன் தொடர்புகளைத் துண்டித்ததைத் தொடர்ந்து 1958இல் அரசு ஆரம்பித்த சீன தேசப்பற்றுள்ள கத். சங்கத்தின் முதல் ஆயர் பேனடின் டொங் விசுவாசத்தைப் பொறுத்தமட்டில் நாம் உரோமைக்குப் பிரமாணிக்கமாயிருப்பதாகக் கூறியுள்ளார்.

சீனா நியமித்த ஆயர்களும் வெளிநாடுகளிலிருந்து பொருளாதார உதவிகளைப் பெற்றுள்ளனர். சங்காய் ஆயர் அலோசியஸ் ஜின் 1988இல் ஒஸ்திரியா, ஜேர்மனியிலிருந்து 5லட்சம் மார்க்குகளும், சுவிற்சர்லாந்திலிருந்து 1லட்சம் பிராங்குகளும், பிரான்சிலிருந்து 1லட்சம் மார்க்குகளும் பெற்றுள்ளார்.

சீனத் திருச்சபை பெறுகின்ற நிதி உதவி சீன தேசப்பற்று கத். சங்க அனுமதியுடனேயே பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

உணவு விடுதி, தொழிற்சாலை, பாலர் பாடசாலை, முதியோர் இல்லம் போன்ற சீனத் திருச்சபை நடத்தும் நிறுவனங்கள் வருவாயுள்ளனவாக இயங்குகின்றன.

## வாழைநாரிலிருந்து கைப்பணிப் பொருட்கள்

திருக்குடும்பக் கன்னியர் சிலர் ஏழைக்கிராமவாசிகளுக்கு வாழை நாரிலிருந்து கைப்பணிப்பொருள்கள் உற்பத்தி செய்வதைப் பயிற்றுவதில் முனைந்துள்ளனர்.

எம்பிலிப்பிட்டிய என்னுமிடத்தில் வாழை ஏராளமாகப் பயிரிடப்படுகிறது. குலைகளை வெட்டியபின் கழித்துவிடப்படும் மரங்களிலிருந்தே இந்நார் பெறப்படுகிறது. வர்த்தக ரீதியாக வாழைநார் கைத்தொழிலுக்கு மூலப்பொருளாக பெரிதும் பயன்படுத்தப்படுவதில்லை என எம்பிலிப்பிட்டிய மடத்தின் தலைவியான அருள் செல்வி ஆர்க்கேடியா கூறுகின்றார்.

காடு சூழ்ந்த இக்கிராமத்துக்கு கன்னியர்கள் ஒற்றையடிப்பாதை வழியாக நடந்து சென்று அங்குள்ள மக்களுக்கு பயிற்சி அளிக்கின்றார்கள். தீவிர அபிவிருத்திக்காக இக்கிராமம் தெரிவு செய்யப்பட்டிருக்கிறது. இதற்குத்தேவையான நிதியை காலி மறைவட்ட செடெக் நிலையம் கொடுத்துதவுகிறது.

பாகிஸ்தானில் பயிற்சி பெற்ற ஒரு கன்னியர் தொழில் நுட்ப அறிவை வழங்குகிறார்.

குலை வெட்டப்பட்டவுடன் வாழையை நீரில் ஊறவிட்டு, அடித்து நார் எடுக்கப்படுகிறது. வெண்மையும் பளபளப்புமுள்ள இந்நார் உறுதியானதாகஇருப்பதால் கைப்பைகள், மேசை விரிப்புகள், சுவர் அலங்காரங்கள் முதலியன செய்வதற்கு ஏற்றது.

கன்னியர் தமது மடத்திற்கண்மையில் ஒரு உற்பத்தி விற்பனை நிலையத்தை ஆரம்பிக்க எண்ணியுள்ளனர்.

## ஒலிப்பதிவு வேதாகம நூல்களின் அதிகரிப்பு

இந்தியா, பங்களதேஷ், இந்தோனேசியா, பாகிஸ்தான் போன்ற பல நாடுகளில் ஒலிப்பதிவு வேதாகம நூல்கள் முன்னோடித் திட்டமாக ஏற்கெனவே பாவனையில் உள்ளன. தாய்லாந்திலும் இவை விரைவில் நடைமுறைக்கு வரலாம்.

இத்தகவலை சிங்கப்பூரில் ஐக்கிய வேதாகம சங்கத்தின் பசுபிக்—ஆசிய மகாநாட்டிலிருந்து திரும்பிய தாய்லாந்து கத்தோலிக்க தொடர்புசாதன ஆணைக்குழுவின் தலைவர் ஆயர் ஜோர்ஜ் பிம்பிசன் தெரிவித்தார். ஒலிப்பதிவு வேதாகம நூல்களை விரைந்து தயாரிக்கும்படியும், வீடியோ திட்டங்களை ஆராயும்படியும் அவர் கூறியுள்ளார்.

முன்னோடித் திட்டங்களை வகுப்பதற்காகவும் எதிர்கால நடைமுறைகளை ஆயத்தம் செய்வதற்காகவும் 1990 செப்டெம்பர் மாதம் ஒரு கருத்தரங்கு நடைபெறவிருக்கிறது.

சிங்கப்பூரில் நடந்த மகாநாட்டில், வேதாகம நூல்களின் விநியோகம் 20 மில்லியனிலிருந்து 300மில்லியனுக்கு அதிகரித்திருப்பதாக தெரிவிக்கப்பட்டது. 235 மொழி பெயர்ப்புகள் தற்போது நடந்து கொண்டிருக்கின்றன.

வாசிக்கும் வழக்கமில்லாதவர்களுக்கும் இளைஞர்களுக்கும் வேதாகமம் கிடைக்க வழி செய்யப்பட வேண்டும் என சிங்கப்பூர் மகாநாட்டில் வலியுறுத்தப்பட்டது.

## நேபாளத்தில் மனந்திரும்பிய கிறிஸ்தவர்களுக்கு சிறைத்தண்டனை

உலகின் ஒரேயொரு இந்து இராச்சியமாகிய நேபாளத்தில் இந்துமதத்திலிருந்து கிறிஸ்தவத்திற்கு மதம் மாறியதற்காக ஒரு மாவட்ட நீதிமன்றம் நால்வருக்கு ஒரு வருட சிறைத்தண்டனை விதித்தது. இந்நால்வரும் சந்திரகாடி கிராமத்தைச் சேர்ந்தவர்கள்.

நேபாளத்தில் மதமாற்றம் சட்டவிரோதமானது. 1988-ல் 100 பேருக்கு இதற்காக சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. 126 பேர் விசாரணையில் இருக்கின்றனர்.

இத்தகைய தடைகள் இருந்தபோதிலும் நேபாளம் வத்திக்கானுடன் தூதரகத் தொடர்புகளை வைத்துக் கொண்டுள்ளது.

காட்மண்டுவில் ஒரேயொரு கத்தோலிக்க ஆலயம்தான் உண்டு. இங்கு வழிபடும் சுமார் 1000 கத்தோலிக்கரில் ஏறக்குறைய 450 பேர் நேபாளத்தைச் சேர்ந்தவர்கள்.

நாட்டின் முழுச் சனத்தொகையில் ஏறக்குறைய 25,000 பேர் கத்தோலிக்கராவார். சுமார் 100 துறவற மறைப்பணியாளர் இங்கு பணிபுரிகின்றனர். பெரும்பாலும், கல்வித்துறையிலேயே இவர்கள் பணியாற்றிவருகின்றனர்.

## ஜப்பானில் வத்திக்கான் அரும்பொருட் கலைக் கண்காட்சி

வத்திக்கான் அரும்பொருட் கலைக் கண்காட்சியொன்று மேற்கத்திய கலைக் கண்காட்சி சாலையில் மார்ச் 21-ம் திகதி திறந்துவைக்கப்பட்டது. பிரசித்திபெற்ற ஓவியர் பலரின் படைப்புகளும் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

இக்கண்காட்சி ஜப்பானிய தேசிய தொலைக்காட்சி, வெளிநாட்டமைச்சு, யொமியூரி என்னும் பத்திரிகை, யசூதா காப்புறுதி போன்றவற்றின் ஆதரவில் நடைபெறுகின்றது.

கருதினால் செபஸ்தியனோ பகியோ, பேராயர் போல் மார்க்கிங்கஸ் ஆகியோர் திறப்பு விழாவின் போது சமூகமளித்திருந்த 9 பேர் கொண்ட தூதுக் குழுவுக்கு தலைமை தாங்கினர்.

டோக்கியோவில் மே 21-ல் முடிவுக்கு வரும் இக்காட்சி பின்னர் பிற ஜப்பானிய நகரங்களிலும் காட்டப்படும்.

ஜப்பானிய தொலைக்காட்சி வத்திக்கான் கலைப்பொருள்கள்பற்றி 90 நிமிட நிகழ்ச்சியொன்றை ஒளிபரப்பியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்

## எம்கருத்து

# குற்றச்சாட்டு

பல்வேறு பொது மேடைகளிலும் பேசுகின்ற பிறமதப் பெரியார்கள், கிறிஸ்தவர்கள் லட்சக் கணக்கான பணத்தைச் செலவிட்டு, பசப்பு வார்த்தை களைப்பேசி, தம்மவர்களை மதம் மாற்றி வருவதாக முழங்கியிருக்கிறார்கள்.

வடக்கு கிழக்கு பகுதிகளில் கடந்த ஆறு வருடங் களாக இடம் பெற்றிருக்கும் நெருக்கடியான சூழ் நிலைகளின் மத்தியில் நாம் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எவரையும் மனம் மாற்றவோ, மதம் மாற்றவோ நினைக்கவும் இல்லை, அத்தகைய செயல் களில் ஈடுபடவும் இல்லை. உண்மையாகவே மதம் மாறவிரும்பி வந்தவர்களையும் சந்தேகக் கண்கொண்டு நோக்கி, தீர விசாரித்து, நோக்கத்தை அறிந்தே வர வேற்றிருக்கின்றோம் என்று துணிவுடன் கூற முடியும்.

2 ஆம் வத்திக்கான் சங்கத்துக்கு முற்பட்ட கால மாயிருந்திருந்தால் குற்றுயிராய்க் கிடப்பவனுக்கும் தலையில் தண்ணீர் ஊற்றி, ஞானஸ்நானம் கொடுத்து மந்தையின் எண்ணிக்கையைப் பெருக்க, முயற்சிகளில் ஈடுபட்டிருப்போம். ஆனால் இப்போது எமது நிலையை நன்கு உணர்ந்த காரணத்தினால் அத்தகைய மரபை மாற்றி, வாழும் திருச்சபையாக, வாழவிடும் திருச் சபையாக, சான்று பகரும் திருச்சபையாக பணியைத் தொடருகின்றோம்.

நற்செய்தியாகிய ஒளியை அந்தந்தத் தலை முறைக்கு புரியக் கூடிய மொழியில் எடுத்து ஓதுவது திருச்சபையின் பணியென அறிவோம். திருச்சபை தானிருக்கும் உலகில், மாவினுள் புதைக்கப்பட்ட புளிக்காரம் போல் இருத்தல் வேண்டும்.

சமூக சேவை வேண்டாம், அரசியல் வேண்டாம், கலாசாரங்களிலே ஈடுபாடு வேண்டாம் என்று சொல்லிக்கொண்டு ஒதுங்குவது 2 ஆம் வத்திக்கான் சங்கத்தின் உணர்வுக்கு முரணானது.

வத்திக்கான் சங்கம் தந்த புதுப்பார்வையின் விளைவாக உலகளாவிய திருச்சபையானது எளிய நாடு களை முன்னேற வைக்க, தேசங்களிடையே சமூக நீதியை நிலைநாட்ட முயன்றுவருகின்றது.

1967 இல் திருத்தந்தை 6 ஆம் சின்னப்பர் ''மக்கள் முன்னேற்றம்'' என்ற சிறப்பு வாய்ந்த சுற்று மடலை வரைந்தார். நடைமுறையில் அன்புப்பணியில் திருச்சபை ஈடுபடாவிட்டால் மறைபோதகப்பணி பயனுடன் செயல்படாது எனக் கூறினார்.

அவர் அன்று ஆரம்பித்த அன்புப்பணி தொடர் கிறது. உலகெங்குமுள்ள மக்களின் துணையுடன் எமது குருக்கள் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு உணவும் உறையுளும், வேறு பல உதவிகளும் அளித்துக் காத்து வருகின்றனர்.

எனவே இன்று கூறப்படும் பிரச்சாரம் கத்தோ லிக்கருக்கு எதிரானது அல்ல என்பதை எம்மவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

நாங்கள் எவரையும் பசப்பு வார்த்தைகூறி திரு மறையில் சேர்த்துக் கொள்ள முயற்சி எடுக்கவில்லை. காசைக் காட்டியேசுவைப் பின்செல்லத் தூண்டவில்லை என்பதை எம்மவர்கள் நன்கு அறிவார்கள்.

உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற் செய்தியினை அறிவியுங்கள் என்ற கட்டளை எமக்குப் புறம்பானது அல்ல. நாம் திருமறையைப் போதிக்க வேண்டும். பொருள் பெறலாம் என்ற நோக்கத்தோடு அல்லாமல், உண்மையாகவே கிறிஸ்துவில் கொண் டுள்ள விசுவாசத்தால் திருமறையை ஏற்றுக்கொள்ள மக்களை ஆர்வம் கொள்ளச் செய்வது நமது தலையாய கடமை. இதனை உணர்ந்து சமூக முன்னேற்றப் பணிக்கு கொடுக்கும் அதே ஆர்வத்தை, திருமறை யைப் போதிக்கவும் பயன்படுத்த வேண்டும்.

எனவே சமூக முன்னேற்றப்பணியில் ஆர்வ முடன் ஈடுபடுவோம், அவை மறைபரப்பு நோக்குடன் செய்யப்படவில்லை என்பதை எல்லோரும் உணர்ந்து கொள்ளச் செய்வோம்.

# உயிலங்குளப் பங்கில் மறையறிவுப் போட்டி

உயிலங்குளப் பங்கிலுள்ள பாடசாலை மட்டத்திற்கிடையி லான மறையறிவுப் போட்டி 06-05-89 அன்று காலை 9 மணி யளவில் மன்/இலகடிப்பிட்டி றோ. க. பாடசாலையில் பங்குத் தந்தை அருள்திரு. ஸ்ரனி அன்ரனி அ. ம. தி. அடிகளார் தலைமை தாங்கி ஆரம்பித்து வைத்தார். இப்போட்டிக்கு பங்கிலுள்ள பாடசாலைகளா கிய மன்/பறப்பாங் கண்டல் மன்/உயிர்த்தராசங்குளம் மன்/ உயிலங்குளம் மன்/இலகடிப் பிட்டி மன்/நொச்சிக்குளம் ஆகிய ஐந்து பாடசாலை மாண வர்கள் பங்குபற்றினார்கள். இப் போட்டி மூன்று பிரிவுகளாக நடைபெற்றது. ஒவ்வொரு பாடசாலையிலும் ஒரு பிரிவில் ஐவர் பங்குபற்றினார்கள். இவர் களிலிருந்து ஐவர் மட்டுமே புள்ளிகள் அடிப்படையில் மறை வட்டப் போட்டிக்கு தெரிவானார்கள். அத்தோடு கூடிய புள்ளிகள் பெற்று முதலி டம் பெற்ற குழுக்களுக்கு பரி சுகளும் வழங்கப்பட்டது. 1-ம் பிரிவில் முதலிடத்தை உயிர்த்த ராசங்குளப் பாடசாலையும் 2-ம் பிரிவில் முதலிடத்தை இலகடிப் பிட்டி பாடசாலையும் 3-ம் பிரி வில் முதலிடத்தை இலகடிப் பிட்டி பாடசாலையும் பெற்றது மறைவட்டப் போட்டிக்கும் பறப்பாங் கண்டலிலிருந்து ஒரு வரும் உயிர்த்தராசங்குளத்தி லிருந்து 4 பேரும் உயிலங் குளத்திலிருந்து 3 பேரும் இல கடிப்பிட்டியிலிருந்து 7 பேரும் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கி. பாஸ்கரன்
காத்தாங்குளம்

# அரிப்பில் மறைக்கல்வி விழா

''மறைஅறிவு எம்மை விசு வாசத்தில் ஆழப்படுத்தி புனி தப்படுத்துகிறது'' கடந்த 06 ஆம் திகதி அரிப்பில் மறைக்கல்வி விழா இடம்பெற் றது. பங்கிலுள்ள அனைத்துக் கோவில் மாணவ மாணவிக ளும், அரிப்பு 'சிலாபத்துறை' முள்ளிக்குளம், கொக்குப்படை யான் மருதமடு, ஆகிய கோவில் பிரதிநிதிகளும், கலந்துகொண் டனர். பங்குத்தந்தை வண. பிதா. T. நவரெட்ணம் அடிக ளாரின் திருப்பலியுடன் விழா ஆரம்பமானது. அவர் விசுவா சம், அதை அறிந்துகொள்ள முயற்சிப்பது- அதை வாழ்வில் கடைப்பிடிப்பதன் மூலம் மீட்பை அடையமுடியும்'' என் றும் மறைக்கல்வி எம் விசுவா சத்தை தளரவிடாமல் பாது காக்கின்றது. சிறுவர் முதல் முதியோர் வரை மறைக்கல்வி கற்கவேண்டும் என்றும் கூறி னார். கலைநிகழ்ச்சிகள் மாலை 5.30 மணியளவில் கலை அரங் கத்தில் இடம்பெற்றன. மறை ஆசிரியர்கள் சார்பில் திரு. வின்சன் பீரீஸ் தலைமைதாங்கி னார், கடந்த வருடம் விவிலிய வினாவிடைகள், மறைக்கல்வித் தேர்வு இவற்றில் திறமைச் சித்தி பெற்றவர்களுக்கு பங் குத்தந்தை அவர்களால் நற் சான்றுப்பத்திரங்கள் வழங்கப் பட்டன. கோவில், மட்டங் களில் பூசைவரவு, கூட்டவரவு, மறைக்கல்வி வகுப்பிற்குவரவு, ஆகியவற்றுடன் கலைநிகழ்ச்சி களின் போட்டியில் வெற்றியீட் டியவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

தொகுப்பு
T. ராஜா. குரூஸ் (ஆசிரியர் அரிப்பு.

# புனித நீக்கிலார் இளைஞர் கழக அங்குரார்ப்பணம்

நானாட்டான் பங்கைச் சேர்ந்த துணைப்பங்கான வாழ்க் கைப் பெற்றான் கண்டல் கிரா மத்தில் அமைந்துள்ள புனித சந்நீக்கிலார் ஆலயத்தைச் சேர்ந்த கத்தோலிக்க இளை ஞர்களும், யுவதிகளும் ஒன்று கூடி புனித நீக்கிலார் இளை ஞர் கழகம் ஒன்றை ஆரம்பித் துள்ளனர். திருவாளர் ஜோண் பொஸ்கோ அவர்கள் அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். போஷகராக பங் குத்தந்தை ம. போல் நட்சத் திரம் அ. ம. தி. அடிகளார் செயலாற்றி வருகின்றார். முக் கிய குறிக்கோள்கள் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்து வதும் இளைஞர்களிடையே இலைமறை காயாக இருக்கும் திறமைகளை வெளிக்கொணர் வதுமாகும்.

தலைவர்:- திரு. அ. செப மாலை, உபதலைவர்:- செல்வி. செ மேரியூக்கறிஸ்ரா, செய லாளர்:- செல்வன். அ. ஜெகநாதன் உபசெயலாளர்:- செல்வி. பே. அந்தோனியா, பொருளாளர்:- செல்வன். அ. ஜெயக்குமார், நிருபர்:- எஸ். மேரி. மில்ரெட்.

தகவல்:- க. ஜெனவி.

# நெடுந்தீவுப்பங்கில் கத்தோலிக்க ஆசிரியர்சங்கக் கூட்டம்

நெடுந்தீவுக் கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் கடந்த 4-5-89 மாலை ஒரு கூட்டம் நடத்தியது. கருப் பொரு ளாக ''மறைக்கல்வியில் மாணவர் விழிப்பு'' என்பது எடுத்துக் கொள்ளப்பட்டது. கத்தோலிக்க ஆசிரியர் சங்கத் தலைவர் A. W. அரியநாயகம் 'ஆசிரியர்களாகிய யாம் சித றுண்ட ஆடுகளைப் போல் இருக் காமல் விழிப்புணர்வுடன் இருந்து மாணவர் மத்தியில் மறைக் கல்வி எந்த அளவுக்கு பயன்படுகின்றது என்பதைக் கண்காணிப்பது அவசியம்'' என்றார்.

றோ. க. பெ. பாடசாலை அதிபர் அருட் செல்வி லொறன்ரினா அவர்கள் ''நம் பங்கில் உள்ள பிள்ளைகளில் கூடுதலானோர் மறைப் பயிற்சி பெற ஆவன செய்ய வேண் டும் எனக் கேட்டுக் கொண் டார். உப அதிபர் M. S. A. ஜஸ்வேல்ட் ''மாணவர் சமு தாயத்தின் மறையறிவில் புரட்சியைப் படைக்கக் கத் தோலிக்க ஆசிரியர் ஒவ்வொரு வரும் முன் வர வேண்டும்'' எனக் கேட்டுக் கொண்டார்.

மறைக் கல்வியின் பயன் பற்றிக் கருத்துரைகள் நடத்த வேண்டுமெனவும் பாடசாலை மாணவ மாணவிகள் அனை வரையும் பங்கு கொள்ள வைக்க வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

# இசை...

இசையென்ற மந்திரத்துக் கெல்லாமே இசையும்
அசைகின்ற புவிகூட அசையாது நிற்கும்
விடங்கொண்ட கொடுநாகம் படங்கொண்டு ஆடும்
வெறிகொண்ட விறல்வேங்கை விழிமூடி மயங்கும்
கஜராஜன் கால்தூக்கி இசைக்கேற்ப ஆடும்
கர்ச்சிக்கும் அரிமாவும் கொடுவாயை மூடும்
கனிவான இசை கேட்டுக் கற்பாறை உருகும்
கடல் பொங்கி அலைமோதிக் கணத்தினில் பெருகும்
இனிக்கின்ற இசைகேட்டு இறைகூட மயங்கும்
அருளோடு வரங்கூட அதற்காக வழங்கும்
துயிலாத குழந்தையும் இசைகேட்டுத் துயிலும்
துயில்கின்ற ஜீவன்கள் துள்ளியே எழும்பும்
தமிழ்காத்த புலவர்கள் இசைகேட்டு மன்னர்
தனிராஜ்யம் பரிசாகக் கொடுத்த கதை உண்டு
கனிவான இராவணனின் கானத்தில் மயங்கி
கைலைச்சிவன் வாள் கொடுத்த கதைகூட உண்டு
யாழ்பாடி பரிசாகப் பெற்றதுதான் — எங்கள்
யாழ்ப்பாணம் என்றுமொரு வரலாறு உண்டு
இதயத்து நோய்க்கெல்லாம் இசைநல்ல மருந்து
இரசிகர்கள் காதுக்கு அது நல்ல விருந்து
இறுதியாய் ஒரு வார்த்தை இசை பற்றி ...... ஒன்று
இசை சற்றுப் பிசகினால் ......? வசை தானே பரிசு!

'' நவாலியூர் நாயகி ''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்கொரு பாதுகாவலன் - உங்கள் பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்

# யாழ். மறைவட்ட திருப்பாலர் சபைக் குழுத் தலைவர்களுக்கான கருத்தரங்கு

திருப்பாலத்துவசபை குழுத் தலைவர்களுக்கான கருத்தரங்கு மே 12ஆம் திகதி யாழ் நகரில் நடைபெற்றபோது பதுளை மறைவட்ட இயக்குனர் அருள் திரு. M. M. இராசநாயகம். வேதாகம ஆதாரத்துடன், மனிதனின் அழைப்பு, அவன் இறைவனை எதிர்த்து ஏற்பட்ட நிர்க்கதி, இறைவனின் அழைப்பை ஏற்ற முதுபெரும் தந்தையர்கள், இறைவாக்கினர், திருமுழுக்கு அருளப்பர், ஈற்றில் இறை மகன் கிறிஸ்து ஆகியோரின் பணியையும், வாழ்வையும், துன்பங்களையும், வெற்றியையும் விளக்கி காட்டினர். இதே கஷ்டங்கள் மத்தியில் திருச்சபை இலங்கையில் வளர்ச்சியுற்ற வரலாற்றையும், இன்று பொது நிலையினர், சிறுவரின் பணியின் முக்கியத்துவத்தையும் கூறி சிந்திக்கவிட்டார்.

தேசிய நடுநிலையச் செயலர் அருள்செல்வி பொனவன்ரைன் "பாப்பரசரின் மறைபரப்புச் சபைகள்'' பற்றி ஆரம்பம், வளர்ச்சி, பாப்பரசரின் அங்கீகாரம் பற்றி விரிவாக விளக்கினர் சிறப்பாக திருப்பாலர் சபைக்குழு அமைப்பதன் நோக்கம், ஒழுங்குகள், வழி காட்டிகளின் வேலைகள் பற்றி எடுத்துக் காட்டினர்.

யாழ் மறைவட்ட இயக்குனர் அருள்திரு. பிரான்சிஸ் யோசவ் யாழ்ப்பாண மறைவட்ட மக்கள் தொகை, கத்தோலிக்கர் தொகை, மறைப் பணி புரியும் குருக்கள் துறவிகள், மறையாசிரியர்கள், தொண்டர்கள், பக்திச் சபைகள் யாவையும் அண்ணளவாக எடுத்துக் காட்டி இறைவார்த்தைப் பணிபுரிய பொதுநிலையினர், சிறுவர்களின் அவசியத்தைச் சுட்டிக்காட்டினர்.

மறைவட்ட அலுவலகம் ல் திருப்பாலர் சபையாருக்கு உதவ ஓர் நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டது. தலைவர்[ திரு. P. அன்ரனி யோசெவ் ராஜா—ஊர்காவற்றுறை. உபதலைவர்: செல்வி. அஜந்தா வில்சன்—யாழ்ப்பாணம். செயலர்1 மறையாசிரியர் திரு, C. C. பங்கிராஸ்—மானிப்பாய உபசெயலர்: செல்வி மறிஸ்ரெலா அந்தோனிப்பிள்ளை—நல்லூர். பொருளர்: செல்வி. எமெல்டா யொசவின்-உடுவில்

தகவல்: மக்டலீன்சின்னப்ப

# "வாழ்வுதய" பெண்கள் வட்டம்

மன்னார் மறைவட்ட வாழ்வுதய நிறுவனம் மன்னார் மாவட்ட முழுமனித முன்னேற்றத்தில் அக்கறை கொண்டு திறம்பட பணியாற்றிவருகின்றது. இந்தச் சீரிய பணியில் கூடிய அளவில் பெண்களை ஈடுபடுத்துமுகமாக ''பெண்கள் வட்டம்'' என்னும் அமைப்பை உருவாக்கியுள்ளது. இதற்கான கருத்தரங்கு மன்னார் திருமறைப்பணி நிலையத்தில் சித்திரை 24-26 வரை நடைபெற்றது. அருட்செல்வி தெரசில்டா இக்கருத்தரங்கிற்கான சகல ஒழுங்குகளுக்கும் பொறுப்பாக இருந்தார். நாம் வாழும் சமுதாயத்தைச் சிறப்பாக அமைப்பதில் பெண்களின் பெருமையான கடமைகளையிட்டு சிந்திக்க ஒன்று கூடுமாறு அவர் விடுத்த அழைப்பை ஏற்று சித்திரை 24 ஆம் திகதி காலை 10 மணிக்கு 40 யுவதிகள் சமூகமாயிருந்தனர்.

மன்னார் வாழ்வுதய இயக்குநர் அருள்திரு அல்பன் ராஜசிங்கம் அ. ம. தி. அடிகள் முழுமையான மனித முன்னேற்றத்திற்கு பெண்களின் பங்கு முக்கியமானது என்றார்.

மன்னார் தலைமையக உதவி அரசாங்க அதிபர் திரு. குரூஸ் தமதுரையில் "அபிவிருத்திகள் மக்களை மையமாக வைத்து செயற்படவேண்டும். மனித சக்திகள் வெளிக்கொணரப்பட்டு அந்தந்த பகுதி மக்கள் அதனுல் பயன்பெறவேண்டும். நமது மனப்பாங்குகள் பணம் சார்ந்ததாகஇராமல் வறியவர்களிடமும் உள்ள திறமைகள் இனம் காணப்படவேண்டும்'' என்றார்.

இரண்டாம் நாள் கருத்தரங்கில் செல்வி பெனடிக்ரா அந்திரேஸ்பிள்ளை ''சமுதாயத்தில் பெண்களின் பங்கு'' என்ற பொருளில் கருத்துரை வழங்கினர். பெண் இந்த சமூகத்தின் ஒளியாய் திகழவேண்டியவள். இந்த ஒளியே இருளானுல் ...? என்று அவர் எழுப்பியவினு சிந்தனைக்குரியதாயிருந்தது. இன்றைய நாட்களில் பெண்மை மறுக்கப்பட்டு மறக்கப்படுகிறது. பெண்ணின் சகல செயற்பாடுகளிலும் அவளின் ஆளுமை விளங்கவேண்டும். தன்னில் நிறைவுள்ளவளாக விளங்குகின்ற பெண் எதற்கும், எவருக்குமே அஞ்சமாட்டாள். குழந்தையும், தாய்மையும், இணைந்ததே பெண்மை, பிள்ளையைப் பெற்றவள் மட்டுமே தாய் என்றல்ல. அன்பும், தாய்மைப் பண்பும் கொண்ட ஒவ்வொரு பெண்ணுமே தாய்தான். பொறுமை, ஆசை, சுயநலம், பகட்டு என்பன ஒரு பெண்ணை அநாகரீக வாழ்வுக்கு இட்டுச் செல்கிறது. இது ஒருசமுதாயத் துரோகம் என்று அவர் இடித்துரைத்தார்.

அருள்திரு. பி. யேசுநேசன் அடிகள் "சமுதாயமும் பெண்களும்'' என்ற பொருளில் அரிய பல கருத்துக்களை வழங்கினர்.

பெண்ணின் அறிவு, உணர்வுகள் மேலோட்டமாகப் பார்க்கையில் பலவீனமாகத் தோன்றினும் சமுதாயத்தின் பலம் பெண்தான். சமயத்தை ஏற்றுக்கொள்வதில், வழிபடுதலில் பெண் முன் நிற்கிறள். அவளது இறை நம்பிக்கை, விசுவாசம் ஆழமானது. துன்பத்தைத் தாங்கக்கூடியதானதும், இலட்சியத்திற்காக தியாகம் செய்யக்கூடியதுமான நம்முடைய சமுதாயத்தில் பெண்ணின் பங்கு மிகவும் முக்கியமானது. எதிர்காலத்தை நோக்கிய திட்டமிடுதலில் பெண்ணின் உள்ளுணர்வே பலவற்றை அவளுக்கு உணர்த்தி நிற்கும் என்று அவர் விளக்கிக்கூறினர்.

மூன்றும் நாள் கருத்தரங்கு அருள்திரு. போல் நட்சத்திரம் அவர்களின் உரையுடன் ஆரம்பமானது. தலைமைத்துவ பண்புகள் குறித்து அவர் உரையாற்றினர் பெண்கள் சிந்தனையாளர்கள், தலைவிகள், அவர்கள் உரிமையுள்ளவர்கள் என்று அவர் குறிப்பிட்டார். அறிவு, ஆன்மீகம், உடல், உளம் என்கின்ற நான்கினதும் வளர்ச்சியை அடைதலே முழுவளர்ச்சி என்றார்.

கருத்தரங்கின் இறுதியில் யுவதிகள் தம் பகுதியிலுள்ள தேவைகள் குறித்து மன்னார் வாழ்வுதய இயக்குநர் அருள்திரு. அல்பன் ராஜசிங்கம் அடிகளாரிடம் தெரிவித்ததுடன் வாழ்வுதயம் மூலம் நாம் பெற்றுவரும் உதவிகளுக்கு நன்றி கூறிக்கொண்டார். இயக்குநர் அவர்கள் தமது பதிலுரையில் பெற்றுக் கொள்கின்ற பயிற்சிகளை சகலருக்கும் பலன் கிடைக்குமாறு பயன்படுத்துமாறும் விடுக்கப்பட்ட கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்படும் எனவும் தெரிவித்து கருத்தரங்கை நிறைவு செய்தார்.

தகவல்:-

ஜெயா பாலாஜி
முருங்கன்.

# எஸ்.வி.பி. சபையின் பொதுக்கூட்டம்

புனித வின்சென்டி போல் சபையின் புனித அடைக்கல நாயகி பந்தி ஆனைக்கோட்டை தனது 3வது வருடாந்தப் பொதுக் கூட்டத்தை வைகாசித் திங்கள் 6ம் நாள் (6-5-89) நடாத்தியது. பந்தியின் தலைவி சகோதரி அ. குணரட்ணம் இதற்குத் தலைமை வகித்தார். பங்குத் தந்தை அருள் திரு. கே. பி. சந்தியாப்பிள்ளையும்; யாழ். மத்திய சபைச் செயலாளர் சகோ. சி. செலஸ்ரின் அவர்களும் மங்கள விளக்கேற்றி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தனர். இந் நிகழ்வுகளில் சகோதர பந்திகளின் பிரதிநிதிகளும்; பங்கின் பத்திச் சபையைச் சார்ந்த பலரும் பங்கு கொண்டனர்.

ஆன்ம ஆலோசகர்; ''இப் புனித சேவையில் இன்னும் புதிய அங்கத்தவர்கள் சேர்ந்து சேவை செய்வதற்கு முன் வர வேண்டும். நானும் என்னுல் இயன்ற உதவியைச் செய்ய முன்வருவேன்'' என்று தெரிவித்தார்.

யாழ். மத்திய சபைச் செயலாளர் சகோ. சி. செலஸ்ரின் பந்தியின் அங்கத்தவர்கள் சேவைகள் எவ்வாறு அமைய வேண்டும்? அவ்வாறு சேவை செய்ய முன் வரும் பட்சத்தில் அவர்கள் எதிர் நோக்கக் கூடிய பிரச்சினைகள்; அவைகளை எவ்வாறு அணுகவேண்டும்? என்பன பற்றிய அறிவுரைகளை வழங்கினர். இவற்றிற்கு ஆதாரமாகத் தமது சொந்த அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார்.

தகவல்:- நாவாயூர் தயாளன்

# திரு இசை

அருள்திரு. அதிரியான் யோசப் அ.ம.தி.

மனிதனை மேம்படுத்தும் கவின் கலைகள் யாவையும் திருச்சபை ஆதரித்து ஊக்குவிக்கின்றது அவை அகத்தின் உள்ளுணர்வுகளைச் சிறப்பாக வெளிப்படுத்தும் ஆற்றல் மிக்கவையாதலால், திருச்சபை அவற்றைத் திருமடைக்கலைகளாகப் பயன்படுத்தி, திருக்கலைக்குரிய ஒழுங்குகளையும் விதிக்கின்றது. திருவழிபாட்டுடன் ஆகக்கூட நெருங்கிய திரு நுண்கலை திரு இசையாகும், திருவழிபாட்டுடன் எத்துணை நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளதோ அத்துணை அது புனிதம் பெறுகின்றது. திரு இசை (சித்திரம், சிற்பம், கட்டடக்கலை போலன்று) நாம் அவ்வப்போது இறைவனுக்குப் படைக்கும் உயிருள்ள உடன்கலையுமாகும்.

திரு இசை திருவழிபாட்டுடன் ஒன்றுபடுவதால், அதன் பொது நோக்கங்களையும் தனதாக்கிக் கொள்கின்றது. இறைவனை மகிமைப்படுத்துவதும், மக்களைப் புனிதமாக்குவதுமே இந்நோக்கங்களாகும். திரு இசை திருவழிபாட்டைப் போன்று புனிதமும் எழிலும் பொதுமைப்பண்பும் வாய்ந்ததாய் இருத்தல் வேண்டும். திருவழிபாட்டில் இடம் பெறுந் திருப்பாடல்களிலும் இக்குணங்கள் இலங்க வேண்டும். ஏனெனில் இவையும் இறைவனுக்குகந்த செபங்களாயிருக்க வேண்டும்.

திரு இசையானது திருச்சடங்கின் கண்ணியத்தையும் சீர்சிறப்பையும் கூட்டி, வாய்மொழிக்குச் சக்தியும் ஆர்வமும் ஊட்டி, செபத்தை இனிதும் எளிதுமாக்கி, நெஞ்சில் பக்தி சுரக்கச் செய்து, மக்கள் திருவழிபாட்டில் கூடிய பலனடைய உதவுகின்றது. எனவே இசை மக்களின் கவனத்தையும் பக்தியையும் குறைக்கவோ, சீர்குலைக்கவோ, அல்லது அவர்களுக்கு வேடிக்கையாகவோ, இடறலாகவோ இருத்தலாகாது சொற்களின் கருத்தை மழுக்கவோ, திருச்சடங்கின் சீர்சிறப்பையும் புனிதத்தையும் பங்கப்படுத்தவோ, இறைமாட்சிக்குத்தகாததாய் இருக்கவோ கூடாது.

வழிபடும் இறைமக்கள் கூட்டத்தை அதன் தலையாம் கிறிஸ்துவுடன் ஒரே குரலாய், ஒரே மனதாய் இசைய திருஇசை உதவுகின்றது. ஆகையால், இவ்வொருமைப் பாட்டிற்குத் திருஇசை ஒரு திரு அடையாளமாகத் திகழ்கின்றது. ஒரு குறிப்பிட்ட திருவழிபாட்டுக் காலத்தின் கண்ணோட்டமும், திருச்சடங்கும், வாசகமும், இசையும் ஒன்றிசைந்து, அத்திருவழிபாட்டின் தனிக்கருப்பொருளை அப்பட்டமாய்ப் புகட்டி, மக்கள் உள்ளத்தில் ஆழப்பதியச் செய்ய வேண்டும். இல்லாவிடின், குரு நிகழ்த்தும் வழிபாட்டுடன் ஒன்றிணையாது, அதனேடு போட்டியிடும் இன்னுமொரு நிகழ்ச்சியாகிவிடும். எனவே ஒரு பாடல் பயபக்தியாய்இருந்தாற்போதாது. அது ஒரு குறிப்பிட்ட இறைபணிச் செயலுடன் ஒத்ததாய் இருக்கவேண்டும்.

(தொடரும்)

# விளையும் பயிர்

வட்டக்கச்சிப் பங்கின் தந்தையாம் அருள்திரு. இரா. சூசைநாதன் அவர்கள் மே தினத்தன்று இராமநாதபுரம் புனித ஆரோக்கியநாதர் ஆலய மக்கள் மத்தியில் அன்புப்பணி புரிவதற்கு புனித வின்சென்டி போல் சபையின் புதிய பந்தியை ஆரம்பித்தார்.

மேற்படி நிகழ்வில் கலந்து கொள்ள அழைக்கப்பட்ட யாழ் மத்திய சபையின் செயலாளர் சகோ. சி. செலஸ்ரீன் வின்சென் டி போல் சபையின் அடிப்படை நோக்கங்கள், செயற்பாடுகள் பற்றி எடுத்துக்கூறினர். ''உலகெங்கும் சென்று சுவிசேஷத்தை போதியுங்கள்'' என்று தமது சீடர்களைப் பார்த்து இயேசு பெருமான் கூறினர். அவரது சீடர்களின் வழி வந்த கிறிஸ்தவர்களாகிய எமக்கும் இப்பணிப்புரை பொருத்தமாகும். இறைவனின் மீட்புத் திட்டத்தில் எமக்கும் பங்குண்டு. எனவே சுவிசேஷத்தைப் போதிப்பதோடு மட்டும் நின்றுவிடாது; அதனைச் செயல் வடிவிலும் செய்துகாட்ட வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்.

பசித்தவர்களுக்குப் போசனம்; தாகத்திற்குத் தண்ணீர்; ஆடையற்ருேர்க்கு ஆடை; இல்லிடம்; இன்னும் மற்றைய மனிதனின் இன்னேரன்ன லௌகீக தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம், அவன் தனது ஆன்மீக இரட்சணியத்திற்குத் தேவையானவற்றைப் பெற வழிவகுக்கும். இவை யாவற்றிற்கும் நாம் நம்மையே அர்ப்பணித்துச் சேவை செய்வதன் மூலமே நிறைவேற்ற முடியும் என்றார்.

அத்துடன் மரியாயின் சேனைக்கும், புனித வின்சென்டி போல் சபைக்கும் உள்ள ஒற்றுமை, வேற்றுமை முதலியவற்றை நன்கு தெளிவாக விளங்கப்படுத்தினர். இவ்விடயம் பற்றி அவர் குறிப்பிடும் போது, ''மரியாயின் சேனையினர் ஆன்மீக சேவைகளான செப, தப, ஒறுத்தல் முதலியவற்றின் மூலம் மக்களுக்குச் சேவை செய்கின்றனர். ஆனுல் வின்சென்டி போல் சபையினர் லௌகீகமும் ஆன்மீகமும் இரண்டறக் கலந்த அன்பின் சேவையாகும்'' என்று கூறினர்.

- தகவல்:- நா. து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயங்கள் இருட்டல்ல

சிறுகதை

'ஒரு தாய் மக்கள் நாமென்போம் ஒன்றே எங்கள் குலமென்போம்...?' அந்தத் தேனீர்க் கடையின் இரைச்சலையும் மீறிக்கொண்டு அந்த ஒலிபெருக்கி அலறிக்கொண்டிருந்தது.

அதற்கு எதிரே காணப்பட்ட பெரிய ஆலமரத்தின் நிழலில் நான் பத்திரிகை வாசித்துக்கொண்டிருந்தேன். என்னைப்போல் பலருக்கு அந்த மரம் வெய்யிலில் நின்றும் அடைக்கலம் கொடுத்துக்கொண்டிருந்தது.

'அம்மா...' என்று ஒரு முனகல் சத்தம் முதுகுக்குப் பின்னாலே கேட்டது. திருப்பிப் பார்த்தேன். ஒரு பிச்சைக்காரன். அவனுக்கு மிக அருகில் உட்கார்ந்துகொண்டிருந்தது உறைத்தது பத்திரிகை ருசியில் அவனைக் கவனிக்கவேயில்லை. பரவாயில்லை அவனும் மனிதன் தானே... மனதுக்குள் சமாதானம் செய்துகொண்டு மீண்டும் பத்திரிகையில் பார்வையை ஓடவிட்டேன். முடியவில்லை.

அந்தக் கிழவன். அதுதான், அந்தப் பிச்சைக்காரன் மெதுவாக எழுந்து உட்கார்ந்துகொள்கின்றான். அவனுடைய கரிய வெற்றுடம்பில் ஒரு சிறிய செம்பாட்டு நிறமான துணியைக் கட்டிக்கொண்டிருக்கின்றான். நடுங்கும் கைகளால்மடியைத் துளாவி சில சில்லறைகளைப் பொறுக்கிக் கூர்ந்து கணக்குப் பாரத்து, மிகவும் பிரயத்தனப்பட்டு எழுந்துகொண்டிருக்கும் அவனையே நான் பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

குச்சியான கால்கள் தள்ளாடித் தள்ளாடி அந்தத் தேனீர்க் கடைக்குள் நுழைவதைப் பார்த்ததும் எனக்கு ஆச்சரியம்.

''மனிசன் பீடிவாங்கப் போகுதாக்கும். எதைவிட்டாலும் பீடி குடிக்க மறக்க மாட்டுதுகள், என நம்மூர் பிச்சைக்காரன்களையும் சேர்த்து நினைத்துக்கொண்டேன். எனக்கு அந்தக் கிழவனைப்பார்ப்பதில் சுவாரஸ்யம் வந்துவிட்டது. நானும் எழுந்துகொண்டு கடையை நெருங்கினேன்.

''தம்பி'' கிணற்றுக்குள் இருந்து வரும் பலவீனமான குரலில் கடைக்காரனைக் கிழவன் அழைத்தான்.

''கிழவனைக்கண்டுவிட்டு வேறு புறம் பார்த்துக்கொண்டிருந்த அவன் வெடுக்கென்று திரும்பிப் பார்த்தான்.

''ஒரு தேத்தண்ணி தா மோனை...''

''அடி சக்கை... காசு கேட்டு முடிஞ்சு, இப்ப தேத்தண்ணி கேட்டுத் திரியுங்கோ.''

''இல்லையா காசு வைச்சிருக்கிறன் இந்தா...'' என்று சில்லறைகளை மேசையிலே வைத்தான்.

கடைக்காரன் ஏதோ தீண்டத்தகாததைத்தொட்டுவிட்ட மாதிரி துள்ளி எழுந்தான்.

''ஏ!... கிழவா இப்ப போகப் போறியா இல்லையா...''

'பசிக்குது தம்பி...''

''இவ்வளவு சனம் புளங்கிற இடத்தில அவருடைய கோலத்துக்கு ஒரு தேத்தண்ணி எங்கையாவது கள்ளுக்கொட்டிலுக்குப்போகவேண்டியது தானே'

அருவருப்பாக முகத்தைச் சுழித்துக்கொண்டான். அங்கே அவனின் உடையைத்தான் மதிப்பிட்டார்களே தவிர, அவன் ஒரு மனிதன் என்ற ரீதியில் அவன் வயிறறை மதிக்கவில்லை. எனக்கு அந்தக் கடைக்காரனைக் கடித்துத் தின்ன வேண்டும்போல் ஆத்திரம். அதிலே நின்றால் என்னையும் மீறி வாய்குடுத்து அவமானப்பட நேரிடுமோ என்ற பயத்தில் மெதுவாக வந்து பழைய இடத்திலேயே அமர்ந்துவிட்டேன்.

கிழவன் நகர்ந்த பாடில்லை. பரிதாபமாக கடையிலுள்ளவர்களைச் சுற்றிப் பார்த்தான். அவன பார்வை தம் கண்களைச் சந்திக்கும் முன்னரே ஒவ்வொருவரும் வேறு எங்கேயோ பார்த்தனர். அல்லது தலையைக் குனிந்துகொண்டிருந்தனர். அங்கு நீதிதேவன் இறந்து விட்டிருந்தான்.

கடைக்காரனுக்கு ஆத்திரம். அந்தச் சங்கடமான சூழ்நிலையைக் கலைக்க உரக்க கடைக்காரப் பையனைக் கூப்பிட்டு ''ஆளை வெளியே தள்ளிவிட்டு வா'' என்று சத்தமிட்டான்.

அதற்கு அவசியமில்லாமல் கிழவன் வெளியேவந்துகொண்டிருந்தான் நேரே தனது பழைய இடத்துக்கு வந்துகொண்டிருந்த அவனைப்பார்க்கப் பரிதாபமாக இருந்தது. எனக்கு அருகில் வந்ததும் நின்றுவிட்டான். என் இருதயமும் நின்றுவிட்ட உணர்சசி.

''பாத்தியா தம்பி... பசிக்கெண்டு கேட்டால் தரமாட்டான்களாம் காசுக்குத்தானே கேட்டேன்...''

⁂⁂⁂⁂⁂⁂⁂⁂⁂⁂⁂⁂

எஸ். நெலோமி
மன்னார்.

⁂⁂⁂⁂⁂⁂⁂⁂⁂⁂⁂⁂

கிழவன் எதை எதையோ என்னிடம் சொல்லிக்கொண்டிருக்க. அங்கு நின்ற எல்லோரும என்னையே பார்த்தனர். எனக்கு அவமானமும் வெட்கமும் பிடுங்கித்தின்றது. மெதுவாக எழும்பிக்கொண்டேன். அவன் மீணடும் பழைய இடத்தில் படுத்துக்கொண்டான்.

வீட்டுக்கு வந்துவிட்டேன். அப்போதும் ஏதோ கொலை செய்துவிட்டு வந்த உணர்வு. என் மனச்சாட்சியோடு சண்டை செய்ய எனக்குத் தைரியமில்லை

''அந்தக் கிழவன்... பாவம் எத்தனை நாள் பட்டினியோ, யார் கண்டது? நானென்றாலும் உதவியிருக்கலாம். என்ன மனிசனப்பா நான். மற்றவர்களின் கேலிக்குப் பயந்து எழும்பி வந்திட்டன். எனக்கும் அந்தக் கடைக்காரனுக்கும் என்ன வித்தியாசம்...''?

மனத்திடம் மன்னிப்புக் கேட்டேன். உடனே மனதில் ஒரு புது உணர்வு. அந்தக்கிழவனுக்கு இப்போது உதவிசெய்தால் என்ன? உடனே மனைவியிடம் சொல்லி ஒரு சோற்றுப் பார்சலையும், ஒரு போத்தல் நிறையத் தேனீரையும் எடுத்துக்கொண்டு வேகமாக நடந்தேன்.

கிழவன் இப்போதும், அதிலேயே கிடந்தான். அவன் படுத்திருந்த இடத்தில் வெய்யில் சுரீரிட்டபோதும் அசையவில்லை. 'அப்பு... அப்பு...' என்று பலமுறை கூப்பிட்ட பின்னர் தான் 'ம்...' என்ற மெல்லிய முனகல் கேட்டது. சுயநினைவை இழந்து கொண்டிருந்தான். பேசுவதற்குச் சக்தியில்லை. முதலில் நிழலுள்ள இடத்தில் கிடத்தவேண்டும். கைகளைப் பிடித்தேன், துவண்டு, துவண்டு விழுந்தது. இந்த ஆரவாரத்தில் கடைக்காரன் எட்டிப் பார்த்துவிட்டு எம்மை நோக்கி வந்தான்.

''என்ன ஆள் முடிஞ்சிட்டுதோ...''?

எரித்துவிடுவதுபோல் அவனைப்பார்த்தேன். பழிவாங்கும் புத்தி எனக்குத்தலைகாட்டியது.

''இல்லை. மயக்கம்... ஒரு கிளாஸ் தண்ணி கொண்டு வாருங்கோ'' என்று கூறிவிட்டு நிமிர்ந்து அவனைப் பார்த்தேன அவன் முகத்தில் எதுவிதமாற்றமும் இல்லை. ஒரு அனுதாபத்தோடு கூடிய பரபரப்பு ஒருக்கால்தான் செய்த பாவத்திற்குப் பிராயச்சித்தம் செய்ய நினைத்தானே என்னவோ கடைக்குப்போய் குளிர்சாதனப்பெட்டிக்குள் இருந்து சில்லென்ற ஒரு சோடாப் போத்தலைக்கொண்டு வந்து நீட்டினன் எனககு ஆச்சரியம்.

இன்னும் பலர் உதவிக்கு வந்தனர். அவனை நிழலுக்குக் கொண்டுவந்து வைத்திய சாலைக்குக் கொண்டுசெல்ல ஏற்பாடு செய்தது இன்னும் ஆச்சரியமாக இருந்தது.

இதற்கு என்ன காரணம்? எப்படி எல்லோருக்கும் திடீரென்று ஞானம் பிறந்தது? அவன் பசியால் துடித்தபோது தேனீர் கூடக்கொடுக்காமல் விரட்டிவிட்டனர். அவனுக்கு நீதி கிடைக்காதபோது வாய் மூடி மௌனியாய் இருந்தவர்கள் இப்போது மொத்தமாகச் சேர்ந்து உதவுகிறார்களே. ஒரு வேளை எல்லோருக்கும் என்னைப்போல் குற்ற உணர்வாக இருந்திருக்கும்.

கடைக்காரன் என்னுடன் பேசினன். ''என்ன தம்பி செய்வது, கிழவன் தேத்தண்ணி கேட்டபோது எனக்கும் இரக்கமாகத்தான் இருந்தது. ஆனல் சனத்துக்குப் பயந்து கொண்டு இருந்திட்டன். பிறகு கடைக்கு வந்தவுகள் எழும்பிப்போயிடுங்கள்'' என்றான்.

எனக்குச் சிரிப்பாக இருந்தது. எல்லோரும் ஒருவருக்கொருவர் பயந்து கொண்டு அவனைத்தொடத் தயங்கியதால் ஒரு உயிர் பரலோகம் போகப்பார்த்தது. நல்லகாலம் நான் என்றாலும் துணிந்தேன்.

மனித இதயமானது இரக்கமற்று இருண்டு இறுகியது அல்ல. சூழ்நிலைகளால் அது ஒளிமங்கி விடுகின்றது. எங்கோ இருந்தேனும் ஒருகை தோன்றி ஒளியைத் தூண்டிவிடுமாயின் அது ஒளிரும். மற்றவருக்கும், ஒளி கொடுக்கும்.

ஒருவன் தயங்கினல் எல்லோரும் தயங்குவார்கள். ஒருவன் உதவி செய்யத்துணிந்தால் பல உதவிக்கரங்கள் துணையாக வரும். தயக்கமிருக்காது, மனிதன் என்ற அடிப்படையில் இரக்கம் மனதில் கொஞ்சமாவது ஒட்டிக்கொண்டிருக்கும் தானே? என்பதைப் புரிந்துகொள்ள எனக்குச் சில வினடிகள் போதுமானதாக இருந்தது.

# காவியத் தலைவி

—நாவண்ணன்

(இறுதி அங்கம்)

மரியாளைத் தேவ அன்னையாக - தெய்வீகத் தன்மையின் உச்சத்துக்கு இட்டுச் சென்று அவள்தம் புகழ்பாடும் கைங்கரியத்தை ஜயம் நீங்கு படலத்தில் மிக அதிகமாகவே செய்கின்றார் புலவர்.

மரியாள் உலக மீட்பரையே கருக்கொண்டுள்ளாள் எனும் சேதியை வானவன் மூலம் வளனுக்கு அறியத்தந்த பின்னர் வளன் பெற்ற பேரின்பத்துக்கு அளவே இல்லை. 'பேரறும் கடவுளைத் தாங்கும் பீடமே' என்று மரியாளைப் போற்றித் துதிக்கின்றார்.

வளனுடைய மனக்கண்முன் ஒரு அற்புதக்காட்சி தோன்றுகின்றது. வானவர் புடைசூழ மரியாள் ஆகாயத்திலே தோன்றுகின்றாள் அவள் நின்ற அந்த தெய்வீகத்தோற்றத்தைப் பாடுகற்கு முனிவருக்கே சிறிது தயக்கம் ஏற்பட்டு விடுகின்றது எனவே சூசையிடம் ''அன்று கண்ட மாட்சி நலம் யான் இசைப்பத் துணையே நிற்பாய்'' என இரந்து வேண்டிப் பாடுகின்றார்.

மரியாளின் தெய்வீகக்காட்சி

''தண்கதிர்கால் பிறைக் குழவி அடியால் தேய்த்து''
''உடுக்குலமே முடியாய் சூடி,
''செஞ்சுடரை உடுத்து நின்றாள்'' என்பதன் மூலம் காலிலே பிறையினையும், விண்மீன்களை முடியாகவும், சூரியனை ஆடையாகவும் கொண்டு நின்றாள் மரியாள் என்கின்றார்.

இக்கோலத்தில் மரியாள் நிற்கும் போது வானவர்படை ஒன்பதும் வந்து நின்று தேன்மலர் தூவி, தேன் போன்று பாவிசைத்துப் புகழ்பாடி நிற்கின்றனர். ஒவ்வொரு வானவனும் செஞ்சுடர் ஒளிரும் ஆடையை உடுத்து வரிகளாகவும அவர்கள் தம் மார்புகளில் ''ஆண்டகைதாய்மரி'' எனும் ஒளிரும பதக்கத்தைத் தொங்கவிடடவர்களாகவும தோன்றுகின்றனர்

நவ மலர்மகள்

தொளாயிரம் வானவர்களும நூறு, நூறுபேர் உடைய பத்துக் குழுக்களாகப் பிரிந்து மரியாளின் ஒன்பது சிறப்புகளுக்கு எடுத்துக்காட்டாக, ஒன்பது வித மலர்களாலான நூறு, நூறு மலர்மாலைகளை, மொத்தம் தொளாயிரம் மலர் மாலைகளைச் சூட்டி வணங்குகின்றனர்.

லீலிமலர் மாலைகள்

''காமம் உடைத்து, ஒளி உடுத்து சுடரில் தூய கருத்தில் அமைகன்னி நலம் காட்டுதற்கே'' —

கற்பில் தூயவள் எனக்காட்டும் முகமாக லீலிமலர் மாலைகளை நூறு வானவர்கள் சாத்தினர்.

உரோசா மலர் மாலைகள்

''எந்தை கண்ணி அமை நேய நலம் காட்டுதற்கே''

இறைவன்பால் மரியாள் கொண்ட அன்பின் அடையாளமாக தேன் சிந்தும் செந்நிற உரோசாமலர்களை நூறு பேர் சாத்தினர்.

கமலமலர் மாலைகள்

'கேடவிழ்த்த நெஞ்சினர்க்கும் உறுதிசெயும் கிளர்ந்தனதன் தயாப நலம் காட்டுதற்கே''

தீயோருக்கும் அருள்சுரக்கும் அவள் அருங்குணத்துக்கு அடையாளமாக நூறு கமல மலர் மாலைகளைச் சாத்தினர்.

சூரிய காந்திமலர் மாலைகள்

'மறை செழு நூல் வழி வழுவா கடவுள் நற்றாள் மாநில மெய்ஞ்ஞான நலம் அமைந்தற்கே''

சூரியனையே நோக்கிச் செல்லும் சூரிய காந்தி மலர்களைப் போல இறைவன் பாதத்தையே நோக்கி வாழ்ந்து ஞானமடைந்தவள் என விளக்குதற்காக நூறு சூரியகாந்தி மலர் மாலைகளைச் சாத்தினர்.

குமுத மலர் மாலைகள்

''குலையா நெஞ்சுறுதி எஞ்சா, செல்லலினுக்கு உயர்ந்த திறம் காட்டுதற்கே''

உறுதுயர் வேளையிலும் உறுதி குலையா அவள் ஊக்க குணத்துக்கு உதாரணமாக குமுத மலர்மாலைகள் நூறைச் சாத்தினர்

செவ்வந்தி மலர் மாலைகள்

''கட் பொதுளும் இன்னுமைக்கு அழுக்கு நதான் கதிரினும் தூய் யாட்சி நலம் அணிந்ததற்கே''

கண்வழி உளம் கெடாதவள், கதிரனவனைவிடத் தூய்மை மிக்கள் என்பதைக் காட்டுதற்காக நூறு செவ்வந்தி மலர் மாலைகளைச் சூட்டினர்.

சண்பக மலர் மாலைகள்

''செயிர் ஒன்று இன்றி அரிது உலகம் அதிசயிப்ப நோற்றான் என்ன''

வண்டுகள் உண்ணுத செண்பகமலர் மாலைகள் நூறினை பாவம் அனுகாதவன் என்பதற்குச் சான்றாகச் சாத்தினர்.

வகுள மலர் மாலைகள்

''அரிய தாழ்ச்சி அருள் கொண்டாள் என்ன''

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையெனும் மர்மக் குறுநாவல்

"எங்கள் ஒவ்வொருவரின் வாழ்க்கையும் தனித்தனி நாவல்தான், மனிதன் பிறந்த நாள் தொடக்கம் வாழ்வதிலும் பார்க்கச் சாவதையே இலக்காக வைத்து அதனை நோக்கிச் செல்லும் மர்மக் குறுநாவல்" இவ்வாழ்க்கை எனும் நாவலில பிறப்பதற்கும் இறப்பதற்கும் நடுவில் மனித மனங்கள் எத்தனை எத்தனை விதமான ஏக்கங்கள், எதிர்பார்ப்புக்கள், ஏக்கங்களின் சிதறல்களில் தங்களை அடிமைகளாக்கிக் கொள்கின்றனர். எந்தவொரு மனித மனதிலும் ஏக்கங்கள், எதிர்பார்புக்கள், உறவின் அனர்த்தங்களை பற்றிப்பிடித்து நுகர வேண்டும் என்ற பேராவல். "நான் வாழ வேண்டும், நான் வாழ நீ வேண்டும்" என்ற இணைவில் வாழத்துடிக்கின்றான். ஆனல், மனித வாழ்க்கையில் எதர்பார்ப்புக்கள் பல ஆனல் நிறைவேறுவது சிலதே. அதற்காக மனித உள்ளங்கள பேதலிக்கின்றன. இந்நிலையில் உறவின் நிலைப்பாடுகளை ஒப்பிட்டுப் பார்க்கும் போது மனித உறவுகள் யாவும் நிரந்தரமானவை அல்ல, சில இடைவெளிக்குப் பின் வேடிக்கையான உறவுகளாகவும், போலியான அன்பாகவும் மாறிவிடும்.

ஏனென்றால் நாவலில்

"அவனுக்குத்தான் தெரியும். அதன் ஆரம்பமும் முடிவும் அட! யாருக்கம்மா புரியும். அதன் வேடிக்கையும் அதன் விளைவும்' எவ்வளவு பொருள் பொதிந்த யதார்த்தமான உண்மை வாழ்க்கையெனும் குறுநாவலில் சகுனி நாரதர், துரியோதனன், பாரி, நல்ல சமாரியன், கர்ணன் போன்ற பாத்திரங்களையும சந்திக்கின்றோம். அந்த மர்மக் குறுநாவலில் கள்ளமில்லா வெள்ளை உள்ளங்களையும் கடின இதயங்களையும் சந்திக்க நேரிடுகின்றது. பரந்துபட்ட பிரபஞ்சத்தில் சஞ்சரிக்கும் மனித உள்ளங்கள் பல பாத்திரங்களை சந்திக்கும் போதுதான் வாழ்க்கையெனும் நாவலை உய்த்துணர முடியும்! "நான்," "எனது" என்ற குறுகிய வட்டத்தில் இருந்து வளர்ச்சி அடைந்து தொடர்ந்து மர்மநாவலைப் படிக்கின்றான்

செல்வி ஜேக்கப் ஜெயந்தி
அமதிபுரம்.

---

அ. ம. தி. குருமடம்
கொழும்புத்துறை
26-5-198 .

'அன்பு இளம் உள்ளங்களுக்கு'

## நியமங்கள்




வானத்தைப்
பார்த்துக்கொண்டு
பாதையைத் தவறவிடாதீர்

செருப்பின் அளவைக்கொண்டு
பாதத்தைக்
குறைத்து விடாதீர்

முகத்தின் அழகைக் கண்டு
அகத்தை இழந்து விடாதீர்

பொய்மையின்
சிறப்பைக்கண்டு
மெய்மையை இரக்க விடாதீர்

பரசைப் பேச்சில் மயங்கி
நேர்மையை நெகிழவிடாதீர்

கூரையில் ஏறிய பின்னர்
ஏணியை உதைத்து விடாதீர்

கிளையினில் இருந்துகொண்டு
அடியினை வெட்டி விடாதீர்.

உடைந்துபோன
கண்ணாடிக்காக
உள்ளங்களை
உடைத்துவிடாதீர்

பெண்களின் சிரிப்பில்மயங்கி
மண்ணினில் படிந்துவிடாதீர்.

உள்ளத்தால் ஊனமுற்று
கல்மனதை வளரவிடாதீர்

நல்வாழ்த்துக்களுடன்

அன்பு நெஞ்சன் வி. பி.

---

## குருகுமுத்தண்ணையின் கிசுகிசு-41

அன்னம்மா: இதென்ன அடிக்கடி வருத்தமாய் கிடக்கிறாய். இப்ப எப்பிடி? எப்ப வந்தது? முந்தி பாத்தவர் சரியில்லையோ? ஏன் இப்ப இப்பிடி? என்ன மருந்து சாப்பிடுறாய் பிள்ளை.

குருகு: இப்பதானே அடைக்கலத்துக்கு சொல்லேக்க கேட்டுக்கொண்டு இருந்தனி அன்னம். பிறகும் ஏன் கேட்டு வருத்தத்தை நினைவூட்டுறாய்.

அன்னம்மா: அண்ணை வருத்தம்பாக்க வந்து கதைக்காமற் போனா என்ன நினைப்பினம். அதுதான் திருப்பி திருப்பி கேட்டால் அக்கறை எண்டு நினைப்பினம். எல்லேண்ணை,

குருகு: உதுகளால வருத்தக்காறர் குறை கூறுவினம் எண்டு நினைக்கிறேல்ல பார். தியேட்டரில இன்ரவுலுக்கு சிலர் கேட்பினம் படம் பாக்கவோ, வந்தநீங்கள் எண்டு... இதுபோலத்தான், உங்கட சுகம் விசாரிக்கப் போய் சுமை ஏத்திற பழக்கம்பார்.

---

### வானகத்தை வையத்துள்......

கையிலே காசுமின்றி
மனதிலே மாசுமின்றி
உண்மையிலே. உறக்கமின்றி
உறக்கத்திலே ஊசலின்றி
அமைதியிலே அச்சமின்றி
அன்பினிலே அகங்காரம் இன்றி
இனிமையிலே தனிமையின்றி
தனிமையிலே தயக்கமின்றி
வாழ்ந்திடல் அனைவர்க்கும்
இன்பமையா—இதனல்
வானகத்தையே வையத்துள்
காணலாமே !

மே. யஸ்ரின் சௌகான்
சில்லாலை.

---

### கவலைக்குப் பொறுப்பாளிகள் யார்?

கவலைபபடுபவரைப் பார்த்து இக்கவலைக்கு இவருக்கு ஏதாவது நடந்திருக்கக் கூடும என்று நாம் பேசுவதுண்டு. ஆனல் கவலைப்படுபவரைவிட கவலை கொடுப்பவர்களையே இன்றைய சமூகத்தில் அதிகமாகக் காணக்கூடியதாகவுள்ளது. அதாவது ஒருவருக்கு ஒரு கதையை நாம் அப்பட்டமாக கேட்டதாகவோ அன்றேல் பார்த்ததாகவோ சோடித்து அல்லது கதைப்பதற்கு கதைகள் இல்லாவிட்டால் இப்படிக்கவலைக்குரிய விடயங்களை ஞாபகமூட்டுவது. இவை போன்ற செயல்களால் கவலைக்குப் பொறுப்பாளிகள் அயலவரே என்ற முடிவு தெரிகின்றது. ஆறுதல் கூறவென்று வருபவர்கள் ஆறிய நெருப்பினை மூட்டுபவர்களாக இருக்கிறார்கள. எனவே கவலைக்கு பொறுப்பாளிகள் அயலவரும் என்பதை தெரிந்துகொள்ள வேண்டும்.

D. E.ரட்ணராஜ்
இளவாலை.

---

### ஆன்ம பலம்

ஆசையை திருப்தியாக்க முயல்வதைவிட ஆசையை அடக்கி ஆள்வதிலேயே ஆன்ம பலம் தங்கியுள்ளது-

வெ யூஜின்

---

### ஊக்குவியுங்கள் வாசகர்களே

பாதுகாவலன் பத்திரிகையை உங்கள் நண்பர்களுக்கு அறிமுகப் படுத்துங்கள் "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" நீங்கள் அறிமுகப் படுத்தாமல் எப்படி மற்றவர்கள் அறியமுடியும்? மறைவட்டத்திலுள்ள அனைத்துக் கத்தோலிக்க குடும்பங்களும் வாரம் தவறாது "பாதுகாவலன்" [illegible] வேண்டும்.

---




## கிறிஸ்தவ திருமண ஆயத்தம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

கிறிஸ்தவ திருமணம் :-

ஆதி:- 1/28 பலுகிப் பெருகுங்கள் என முதற் குடும்பத்தை இறைவன் ஆசீர்வதித்சார். திருமண அன்பும் தன் இயல்பிலேயே பிள்ளைகளைப் பெற்று வளர்ப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளது 2-ம் வத்திக்கான் சங், இன் உல திரு எண் 4? "குழந்தைகள் தம்பதிகளுக்கு மாத்திரமல்ல, இறைவனுக்கும் பிள்ளைகள் அகின்றனர்." "மணவாழ்வாலும் மண அன்பாலும் நெருங்கிய சமூகத்தைப், படைத்தவரே, ஏற்படுத்தி, அதற்குரிய சட்டங்களையும் அவரே அமைத்துள்ளார்."

இவ்வாறு மண மக்கள் ஒருவரை ஒருவர் அன்பு செய்யவும் பிரமாணிக்கமாய் வாழவும் துணை புரியவும் பிள்ளைகளைக் கடவுளின் திட்டத்திற்கு ஏற்ப நடத்தவும் வேண்டிய ஆற்றலை அருளும் அருட்சாதனமே. கிறிஸ்தவ திருமணமாம், மெய்விவாகம் என்னும் உன்னதஸ்தானமாம்

இறைவனும் குடும்பமும் :-

தந்தை மகன், ஆவி என்னும் இறை ஆட்கள் மூவரும் குடும்ப உறவால் பிணைக்கப்பட்டுத் தம்மைத் தாமே பகிர்ந்து வாழ்கின்றனர் இந்தக் குடும்பத்தின் சாயலிலேதான் இறைவன் மனிதனைக் குடும்பமாக உருவாக்கினார். கணவன். மனைவிக்கும், பெற்றோர், பிள்ளைகளுக்கும் இடையே உள்ள அன்பு மூவொரு கடவுளிற தோன்றி நிற்கும் நிலையான அன்பின் பிரதிபலிப்பாகும். கணவனும் மனைவியும் தமது அன்பின் ஒன்றிப்பால் ஒரு புதிய மனித உயிரை உருவாக்குகின்றனர், இறைவனுடைய படைப்பில் பங்கு கொள்கின்றனர். இதற்குத் திருக்குடும்பத்தின் வாழ்வு பாதுகாப்பு அளிக்க வல்லது

திருக்குடும்பம் என்னும்போது தேவதாய் சூசையப்பர், யேசு என்னும் மூவரையுப் தனித்தனியாகப் பார்ப்போம்

சூசையின் வாழ்வை நோக்கும் போது அவர் வித்தர். இறைவனுக்குச் சேவை செய்வதே நோக்கமாக வாழ்ந்தவர் தனது வாலிப வயதில் மணவாழ்க்கையை விரும்பாதவர். அப்படி இருந்தும் இறைச்சித்தம் வேத சட்டத்தில் வெளியாவதை உணர்ந்து ஏற்றுக் கொள்கின்றார்

மரியாளை நோக்கும் போது கன்னியாகவே வாழ விரும்பியவள். எப்பொழுதும் கன்னியாகவே இருப்பாள் என்று தூதன் சொன்னமாத்திரத்தில் இறைச்சித்தத்திற்குப் பணிகின்றாள இருவரும் மண ஒப்பந்தத்தில் இருக்கும் காலத்தில் யேசுவின் பிறப்பு மரியாளுக்கு மாத்திரம் வெளிப்படுக்தப்படுகின்றது. சூசைக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் பெரிய சந்தேகமும், ஏமாற்றமும் உண்டாகின்றது.

மரியாளின் கர்ப்பம் அவர்கள் இருவருக்கும் வேதனையை உண்டாக்கும் ஓர் கருவியாயிற்று மரியாள் தன் நிலையைச் சூசைகு வெளிப்படுத்த முடியாமல் இறைவனிடம் செபிப்பதில் மட்டும் ஆறுதல் அடைகிறாள். வேறு எந்த ஒரு மனிதரிடமோ அவள் ஆறுதல் தேடவில்லை சூசை தன் துணைவியின் பண்புகளையும், பிரமாணிக்கத்தையும் நன்கு விளங்கியவர் ஆனதால் அவள் மட்டில் எவ்வித குற்றத்தையோ சாட்ட மனங்கொள்ளவில்லை என்னும் இது விடயமாய்ப் பலவித சந்தேகங்கள் அவருக்கு வந்தது அவை எல்லாவற்றிற்கும் இறைச் சித்தம் என்ன என்பதை அறிய முயற்சித்தார் ஒழியக் குடும்பத்தில் பிரச்சனைகளையோ அயலில் வீண் விசாரணைகளையோ எழுப்பவில்லை. இப்படி அவர்கள் இருவரும் ஒரே மனதாய் செபம் செய்வதில் ஈடுபட்டபடியால் இதைத் தொடர்ந்து வந்த சகல சஷ்ட துன்பங்களிலும் ஒன்றித்து வாழும் குடும்பமாய் எமக்கு முன்மாதிரி உள்ளவர்களாய் இருக்கிறார்கள். சூசையின் பரந்தமனமும், மரியாளின் தாயன்பும், யேசுவின் அமைச்சலும் ஓர் உத்தம குடும்பத்தின் மாதிரி அல்லவா.

குடும்பம் மனித வாழ்வின் ஊற்றாக இருக்கின்றது. பெற்றோரின் அன்பையும், ஆதரவையும் அனுபவத்திராத குழந்தைகள் முழு மனித வளர்ச்சியைப் பெற முடியாது. வாழ்க்கையிலே பெரிதும் பாதிக்கப்படுவதைக் காண்கிறோம். உ+ம்:- போதைவஸ்துப் பாவிக்கும் பெற்றோர் தங்கள் குழந்தைகள் மட்டில் முறையான கரிசனை எடுக்க முடியுமா?

—அருள்திரு.ரூபன் மரியாம்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் வாக்கு அறிவோம்

திருமறைப்பணி நிலையம்
த. பெ. இல. 2.
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

## சிறிய இறைவாக்கினர் - 23

### அபக்கூக்-2

இறைவனுக்கும் இறைவாக்கினர் அபக்கூக்கும் நடக்கும் உரையாடலுடன் இந்நூல் ஆரம்பமாகின்றது. அபக்கூக் தம் மக்கள் அனுபவிக்கும் துன்பங்களைப் பற்றி மனக்கசப்போடு இறைவனிடம் முறையிடுகின்றார் நாட்டில் மக்கள் ஒடுக்கப்படுகின்றனர் கொடுமைப்படுத்தப்படுகின்றனர். வன்முறைச் செயல்கள் மிகுந்துள்ளன. அநீதி பரவிக்கிடக்கிறது. நீதி தடம்புரண்டு போகிறது. இதனால் திருச்சட்டம் வலுவற்றுப், பயனற்றுப் போகிறது கொடியவர்கள் நேர்மையுள்ளவர்களைக் கொடுமைப்படுத்துகின்றனர் இவற்றைக் கண்டும் காணாதது போல் இறைவன் இருகின்றீரே? என முறையீடு செய்கின்றார். இத்தகைய முறையீடு அவருடைய நாட்டுப்பற்றை இறைப் பற்றை எடுத்துக்காட்டுகின்றது. இங்கு குறிப்பிடப்படும் கொடுமைகளிலிருந்தும், கொடுமைப்படுத்துவோரிடமிருந்தும் மக்களுக்கு விடுதலை அளிக்குமாறு மிகவும் உருக்கமாக இறைவனிடம் வேண்டுகிறார் இறைவாக்கினர்.

இறைவாக்கினர் அபக்கூக்கின் முறையீட்டுக்கு இறைவன் கொடுக்கும் பதில் திகைப்பூட்டும் விதத்தில் உள்ளது. அபக்கூக் தனது மக்களைத் துன்பத்திலிருந்தும் கொடுமைப்படுத்துவோரிடமிருந்தும் காப்பாற்றும்படி கேட்டார். ஆனால் இறைவன் யூதாவின் தவறுகளுக்காக அதற்கு எதிராக தமது நீதியின் கருவியாக கல்தேயர்களை எழுப்பப் போவதாகக் கூறுகிறார். இக்கல்தேயர்கள் கொடுமைமிக்கவர்கள். இவர்களைக் கொண்டு யூதாவின் மக்களைத் தண்டிக்கப்போவதாக இறைவன் கூறியபோது அபக்கூக்கின் உள்ளத்தில் புதியதொரு பிரச்சனையை உருவாக்குகிறது. யூதாவின் மக்கள் தீயவர்கள் தான், பாவிகள்தான், இவர்களை விடத் தீயவர்களான பாபிலோனியர்களை இறைவன் தமது கருவிகளாகப் பாவிப்பதில் என்ன நீதி இருக்கிறது எனக் கேட்கிறார். அபக்கூக்கைப் போல இன்றும் நம்மில் பலர் இத்தகைய கேள்வியைக் கேட்கின்றோம் நம்முடைய வழிகள் இறைவனின் வழிகள் அல்ல. —கி. சா. பங்கிராஸ்

அறிந்துகொள்ளுங்கள் 78

## ஒய்வு ஆண்டு

பூமியும் அகிலுள்ள யாவும் ஆண்டவருடையவை. இது இஸ்ராயேல் இனத்தவரின் அசையாத எண்ணம். எனவேதான் லேவியராகமம் 25-ம் அதிகாரத்தில் ஒய்வு ஆண்டு பற்றியும் ஜுபிலி ஆண்டுபற்றியும் கூறப்படுகின்றது. ஒவ்வொரு ஏழாவது ஆண்டும் ஒய்வு ஆண்டாகவும் ஏழுதடவை ஏழாவது ஆண்டு ஜுபிலி ஆண்டாகவும் கொண்டாடப்பட்டது.

ஒய்வு ஆண்டில் நிலத்திற்கு ஒய்வு நிலத்தை உழுதல், விதைத்தல், பயிர்செய்தல், அறுவடைசெய்தல் அனைத்தும் தடைசெய்யப்படுகின்றது. வயல்களிலும் தோட்டங்களிலும் தானாக விளைவன யாவும் பொதுச்சொத்தாகக் கருதப்பட்டன இவை ஏழைகள் அந்நியர்களுக்கு பகிர்ந்து கொடுக்கப்பட்டன ஒய்வு ஆண்டில் கடன்பட்டவனைக் கடனைத் திருப்பித் தரும்படி கட்டாயப்படுத்தக் கூடாது

ஜுபிலி ஆண்டிலும் ஒய்வு ஆண்டு போல நிலத்திற்கு ஒய்வு. இவ்வாண்டு மகிழ்ச்சியின் ஆண்டு அல்லது சுதந்திர ஆண்டு என்று அழைக்கப்பட்டது. இவ்வாண்டில் அடைமானம் வைக்கப்பட்ட பொருட்கள் எல்லாம் அதற்குரிய கடனைப் பெறாமல் அதன் மூல உரிமையாளருக்கு திருப்பிக்கொடுக்க வேண்டும். (லேவி 25: 5—7). இந்த ஆண்டில் அடிமைகளாயிருந்த இஸ்ராயேலருக்கு விடுதலை அவிக்கப்பட்டது.

ஏன் ஜுபிலி ஆண்டில் அடைமானம் வைத்த உரியவர்களுக்கு திரும்பவும் கொடுக்கப்பட்டதென்றால் ஆரம்பத்தில் நாடு பிரிக்கப்பட்டபோது இருந்த அமைப்பும் உரிமையும் எக்காலத்திற்கும் இஸ்ராயேலருக்குள் இருக்கவேண்டும் என்பதால் மற்றும் பெரும் சொத்துடையோரிடமிருந்து வரும் சமூக ஆபத்துக்கள் நீக்கப்படுகின்றன. மேலும் அடிமைகளுக்கு விடுதலை கொடுப்பதன் மூலம் இஸ்ராயேல் மக்களிடையே நிலையான அடிமைத்தனம் இருக்கக் கூடாது என்ற மேன்மையான எண்ணம் உண்டாகிறது.

ஜுபிலி ஆண்டு, ஒய்வு ஆண்டு ஒய்வை முன்னிட்டு தானியங்களை கொள்ளை விலக்கு முதல் வருடங்களில் விற்கக்கூடாது (லேவி 25: 16), பதுக்கல் கொள்ளை லாபத்திற்கு விற்றல் தவிர்க்கப்படுகிறது. ஒய்வு ஆண்டும் ஜுபிலி ஆண்டும் கொடுக்கும் ஒய்வும் விடுதலையும் மகிழ்ச்சியான, மேன்மையான நல்லெண்ணமுடையவை. ஆனால் இது இஸ்ராயேல் மக்கள் வாழ்விலே கடைப்பிடிக்கப்பட்டதா?

— இ. ம. ஜெயசீலன்

## பழமொழி ஆகமமும் முதுமொழியும்.

வாசகர்களே!

நாம் நமது குடும்பங்களிலே- சுற்றத்தினர் மத்தியிலே- நமது கிராமத்திலே- ஏன்? நமது சமுதாயத்திலே- நாம் ஒரு "முகமூடி" வாழ்க்கை வாழுகின்றோம்! இல்லையா? நாம் இவர்களைச் சந்திக்கும் 'முகம்' வேறு நம்முள்ளே புதைந்து கிடக்கின்ற 'முகம்' இன்னொன்று! இது எமது அநுபவத்திலே கண்ட ஒன்று! நீங்கள் ஒவ்வொருவரும் வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளாவிட்டாலும்- மௌனத்திலே "ஆம்" என்று தலையாட்டுவீர் இல்லையா?

திருநூல் 17/1 இல் தக்க பதில் தருகிறது. "சுவையான கறிவகையோடு நிறைய உண்டு. சண்டைபோடும் வீட்டை விடச் சமாதானத்தோடு ஒரு பிடி வெறுஞ்சோறு உண்பது அதிக நலம்" என்ற இறைவார்த்தை நம்மை ஆழமாக சிந்திக்கத் தூண்டுகின்றது அல்லவா?

முதுமொழி ஆசிரியர் இதற்கு தரும் பதில்-?

"கிடைக்கப்போகும் 'பலாக்காயை' விட- நமது கையில் இருக்கும் "களாக்காய்" மேல்!" என்று கூறியதோடு மட்டும் நின்றுவிடாது- இன்னொன்றையும் உரைக்கின்றார்கள் இப்படி?

"ஒப்புடன் முகம் மலர்ந்து- உபசரித்து, உண்மை பேசி, உப்பில்லாக் கூழிட்டாலும் உண்பதே அமுதமாகும்"!

எப்படிப் பொருந்துகின்றார் பார்த்தீர்களா? சிந்தியுங்களேன்!

இன்னொன்றையும் கேளுங்களேன்! 17/3 இல் திருநூல் ஆசிரியர் "உருக்கும் ஆலை'யில் புடமிடப்பட்ட ஒரு தங்கச் சொல்லை உதிர்க்கின்றார் இப்படி!

"வெள்ளி நெருப்பிலும், பொன் உலையிலும், பரிசோதிக்கப்படுவது போல ஆண்டவரும் இதயங்களை சோதித்தறிகிறார்" என்ற இறைவார்த்தைக்கு தமிழ் முன்னோர் விட்டுக் கொடுப்பார்களா? என்ன?

"வல்ல குருநாதர் நம்மை வருத்துவது-? கொல்லவல்ல- கொல்லவல்ல! நம் பொல்லாக் குணம் போக"?

தொடர்ந்து கூறும் திருநூல் ஆசிரியர் 17/4 இல் "தீயவன் வசை நாவுக்கு கீழ்ப்படிகிறான். வஞ்சகன் பொய்யான உதடுகளுக்குப் பணிகின்றான்" இவ்வசனத்தை ஆழமாகச் சிந்தித்தோ என்னவோ நமது கவிஞன் பாடுகின்றான். "நாடக வேடம் கூட, வராது- நாளைய உலகம் இவரை விடாது" என்கிறார்

பொருத்தங்கள் பிழைவரின்- திருத்துங்கள் எங்களையே!

★

### வாரம் ஒரு சிந்தனை

"உன் எண்ணங்கள் அணையாகவும் உன் செயல்கள் வாய்க்கால்கள் ஆகவும் இருக்கவேண்டும்."

உங்கள் அன்பன்
எஸ். ஏ. நாதர்.

# காவலன் கண்மணிகள்

| | |
|---|---|
| ஒளி: 5<br>சுடர்: 21 | எம விழிகளின் ஒளி யேசு<br>எம் வாழ்வின் வழி யேசு |

### வாரம் ஒரு வார்த்தை

ஆண்டவரே! உமமை அஞ்சுவோர்க்கு நீர் சேர்த்து வைத்திருக்கும் அருள் எத்துணை மிக்கது. சங். 30: 19.

### அங்கத்துவம்

158. பு. பாமினி ஆண்டு 10 செண். ஜேம்ஸ் மகளிர் பாடசாலை யாழ்
159. இ. நிமல்டா ஆண்டு 10. செண் ஜெம்ஸ் மகளிர் பாடசாலை யாழ்.
160. து. சிரோமி ஆண்டு 10. யாழ். கன்னியர் மடம், ம. வி. யாழ்.
161. அ நீற்ற ஆண்டு 10. செண். ஜேம்ஸ் மகளிர் பாடசலை, யாழ்.
163. இ. மே. கிளமென்ற் ஆண்டு 10. சம்பத்திரிசியார் கல்லூரி, யாழ்.
164. ம. ஜெயறூபன் ஆண்டு 8. சம்பத்திரிசியார் கல்லூரி, யாழ்.

### கௌரவ அங்கத்துவம்

A/9 ம. மலர்மதி ஆண்டு 12 யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம், யாழ்.
A/10 வெ. யூஜின் திருமலை வீதி, வாகரை, மட்டக்களப்பு.
A/11 M. M. நிக்ஸன் இல. 68, இராசவீதி, கோப்பாய்.

### பேசும் விழி:

அன்புக்கினிய கண்மணிகாள்!

குழந்தை யேசுவின் ஆசிகள் என்றும் உரித்தாகுக. சூரிய உதய மாகாணத்திலிருந்து உதயமான முதலாவது கண்மணி வெ. யூஜினை அன்புடன் வரவேற்கிறேன். அவரின் வருகையுடன் இன்னும் பல கண்மணிகள் அங்கிருந்து வருவார்கள் என ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

"திருக்குறளும் விவிலியமும்" போட்டி 1 இன் முடிவுகள் அடுத்த சுடரில் வரும்.
போட்டி 2 சுடர் 23 இல் வரும். "திருக்குறளும் விவிலியமும்' என்ற நூலைப்படிக்க மறக்கவேண்டாம்.
அடுத்த சுடரில் "தயங்க மறுத்த இதயம்" என்ற சிறு கதையைத் தாவீதடிகள் நினைவுக்கதையாகத் தரவுள்ளேன். படிக்கத் தவறாதீர்கள்.
உங்கள் ஆக்கங்களுக்கு ஊக்கம் கொடுக்க என்றும் காத்திருக்கும்

அன்பின்
அன்பு விழி

### அறுவடையோ மிகுதி அழைக்கின்றார் யேசு

மறைக்கல்வி அறிவினிலே வளர்ந்திடுவோம்.
மகிழ்வுடனே திருப்பலியில் கலந்திடுவோம்.
முறையாக விவிலியத்தைக் கற்று நாமும்
விசுவாச விளக்கொளியில் நடந்திடுவோம்.

குறை குற்றம் காண நாம் முயல்வோமானால்
அடி சறுக்கும் பள்ளத்தாக்கில் வீழ்ந்திடுவோம்
இறைமகனைத் துன்புறுத்தும் கயவராவோம்
மனம் மாறி சின்னப்பராய் புகழ் பெறுவோம்.

விதைத்திடுவோம் விண்ணக வார்த்தைகளை
இறைத்திடுவோம் இன்பத் தமிழ் நீர்தனையே
விளைந்திடுமே வண்ண வண்ண மலர்களும்
நிறைந்திடுமே இனிமை நிறை கனிகளுமே

களைந்திடுவீர் கண்விழித்தே களைதனையே
விரைந்திடுவீர் வேகமாய் இறை பணிக்கே
அறுவடையோ மிகுதி பணியாட்கள் தேவை
அழைக்கின்றார் யேசு நம்மை குரல் கேளீர்.

அ. திதிமு அன்புராஜ் லெம்பேட்
அங். இல. 89.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காவியத்....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

நறுமணமும், தேனும் உடையதாக இருந்தும் காட்டிலே சிறிய மலராக விளங்கும் வகுள மலர் போன்று வான்நிறைந்த வரம் பெற்றிருந்தும் தாழ்ச்சியால் நிரம்பியவள் என்பதை விளக்க நூறு வகுள மலர் மாலைகளையும்.

தும்பை மலர் மாலைகள்

''நாக நெடுந்தலையை ...... திருப்பதத்தால் மிதித்த வெற்றி காட்ட''.

பாம்பின் தலையை மிதித்து வெற்றி காண்பவள் என்பதைக் காட்ட வெற்றி மாலைக்கடையாளமாம் தும்பை மலர் மாலைகளை நூறினை வானவர் சூடினர்.

ஏனையோர் முத்துவடங்களையும், நவமணி மாலைகளையும், ஏனைய அணிகலன்களையும் ஏந்தி நின்றனர்......கபிரியேல், மிக்கேல் தூதுவர் தலைமையில் மணிக்குடை, கொடிகள் தாங்கி, வண்ண மலர்கள் பொழிந்து மங்கல முரசுகள் முழங்கி வாழ்த்தினர். இக்காட்சிகள்கண்ட வளன் அவளை வீழ்ந்து வணங்குகின்றான்; கன்னித்தாயின் புகழ்பாடுகின்றான்.

★ ★ ★

தேம் பாவணியில் உள்ள 36 படலங்களிலிலும் முன் எட்டுப் படலங்களில் மட்டும் மரியாள் மகிமையை முனிவர் எடுத்துக் கூறியதை மிகவும் சுருக்கமாக இக்கட்டுரையில் கூறியுள்ளேன். இது மரியாளை ஒரு தெய்வீகத் தலைவி என்று பார்த்தபார்வை மட்டுமே. அவளை ஒரு குடும்பத் தலைவி என நோக்கப்புகுங்கால் கட்டுரை இன்னும் பல வாரங்களுக்கு விரிவடையும்.

தேம்பாவணியை எம்மவர்கள் படிக்க வேண்டும் அது கூறும் காவியத்தலைவியை, அனைவரும் கண்டு மகிழ வேண்டும் என்பது என் அவா.

## வேதாகம வினாவிடைப் போட்டி - 25

விடைகளை மாத்திரம் தெளிவாக எழுதி உங்கள் பெயர் முகவரியுடன் 20-6-89இற்குமுன் பாதுகாவலன் அ. பெ. இல-2 என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள். பரிசு ரூபா 25/- விடையும் பரிசு பெறுபவர் பெயரும் அடுத்த போட்டியும் 30-6-89 இல் வெளிவரும். விடைகளை 1 சாமுவேல் (6—10) அதிகாரங்களில் காணலாம்.

### வினாக்கள்

1. பேழையையும் தங்கப் பொருட்களையும் சுமந்துசென்ற கறவைப் பசுக்களிரண்டு பூட்டிய வண்டி எங்கே போய் நின்றது?
2. சனுகுப் பாறை என்பதன் பொருள் என்ன?
3. ஜோயேல், அபியா என்போர் யாருடைய புதல்வர்கள்?
4. சாமுவேல் இஸ்ராயேல் மக்களின் அரசனாக யாரை அபிஷேகம் செய்தார்?
5. ''இவனா நம்மைக் காப்பாற்றப் போகிறான்'' பெலியாலின் மக்கள் யாரைக் குறித்து இப்படிக் கூறினார்கள்?

### போட்டி 24இன் சரியான விடைகள்

1. அன்னா; சாமுவேலின் பிறப்பின் மகிழ்வால் 2) ஏல்கானா 3) ஏலியின் மக்கள் 4) ஏலியால் சாமுவேலுக்கு 5) ஏலி 6) 'இஸ்ராயேலரை விட்டுப் புகழ் நீங்கினது'

### பாராட்டுப் பெறுவோர்

லோ. ஏரோணியா சாந்தி லெம்பட், எ. கமறினா, ச. நோயிலின் கூஞ்ஞ, எஸ். அன்ரன் லெம்பேட், எஸ். யூட்ராணி வாஸ், செல்வி. லூசியா ஜெயராணி அ, இமல்டா பி. அமல் றமேஸ் கூஞ்ஞ, அ. தெரசிற்ரு (அருள்மணி), எ. எட்விஜ் (பாமா), ஏ. அன்ரன் பெசில், பி. ஜெசிந்தா ராணி, வி. மேரி பற்றீசியா, W, மறின் டார்னி, பி. ஜோண் கென்னடி, பி. யோண்சி, எஸ். அன்ரன், சிலுவைராசா மேரி ஸ்ரெலா, செல்வி. குருசுமுத்து தவம், சிலுவைராசா அருட்செல்வன், சி. அன்ரன் சுதாகரன், சிலுவைராசா—றேய், ஞா. வசந்த சீலன், பி. எவ். கலிஸ்டஸ், சு. மெல்வின் ரெறன்ஸ் குருஸ், சிலுவைராசா மேரி கலிஸ்ரா, சி. மேரி அஞ்சலா, சந்தியோகு பிரபா, மி. அருளானந்தம் அருள்ஞானசீலி டி. இ. இரட்ணராஜ், நீ. பிரான்சிஸ்கம்மா, நீ. பெனடிற்றம்மா, டி. றியென்ஸி றேச், பி. ஜெசினா, ஈ. குளோடியஸ், போல் மரியநாயகம், க. பிலோமினா, டொறீஸ் ராஜினி, சூ. போல் றஜனி, அ. சவுந்தரநாயகம், இ, யோசவ் மக்சிமஸ், கே. றகி சோசை, கா. பூரணி சோசை, மேரி லீற்ரு சின்னத்துரை, இ. அன்ரனி ஜெறோம், டொறின் காமலிற்ரு பாலசேகரம், இ. கொன்சால்வேஸ், இ. எறிக் யோசப், றமேஜினி கந்தசாமி, அமிர்தம், நிர்மலகுமாரி அருளானந்தம், வி. லூக்காஸ், அ. டொமிற்றில்லா சாந்தா, ஜிறின் யூஜின், ஜெனிற்ரு அன்ரனிராஜா, சூ. யோசவின் தேவராணி சூசையப்பு (றதினி) றுக்சான் பிறிம்மோ ஒஸ்வோல்ட். அந்தோனிப்பிள்ளை வசந்தா, யுஸ்ரஸ் பெனவெந்துார், அ. அசம்ரா யோகமலர், யே. பற்றீசியா டிலாணி, பிலிப்பு நேரிஸ் (சாந்தம்மா) அ. செனபோன் சோசை, ஈ. ஏ. வி. கிறிசாந்தி சில்வா புள்ள, சுகந்தி மரியாம்பிள்ளை, எம், சி. ஞானசேகரன், அ. காமல், மேரி றேச், திருமதி. நாதன் அனித்தா ஷாலின் பிரான்சிஸ், அ. ஜெருங்கலீன் செல்வருஜ்,. செ. அந்தோனி, அருள்ஜோதி பெர்ணுண்டோ சுசி ஸ்ரீபன், எஸ் சுஜித், அ. தே. கார்மலா, சூசை சகாயராசா, செல்வி. யே. ஐறிஸ் யேன் ச. பியூலா, ஜே. ஜெயப்பிரகாஷ், ச. பிரபாகரன், ஆன் சுபோதினி, ஜோ. மேரி. கலைச் செல்வி, ப. பிரதீபா, அ. கு. அன்சலீன் குணசிங்கம் எழிலினி, பொ. கனிதா, அ. மரியருஜினி, ஜோ .மனேடிற்றி. ச. நிலோஜன், மேனகா, துரைராஜ். பாமினி யூடிற் பேணடிக்ற், பொன்னுக்கோன் ஜெனவி, பி. ஜெயந்தி, பி. சுகந்தி, யூலியற் செபமாலை நாதன் செ. மொன்வேட் செல்லையா, அ. செ. கிறிஸ்ரின் அருள் தவராஜ், தர்மலிங்கம், எவாஞ்சிலின், ப. ஷிறேமி, அருட்பிரகாசம் ஜெரூளின் ஜொய்சி, அ. றெஜிஸ் ஜொயிஸ், மரினா சத்தியா ஆசீர்வாதம், ச. அன்ரனிதாஸ் சா. ந. கெயின் சாள்ஸ், எம். மேரி. அக்னெஸ் குரூஸ், ம. மேரி. றஞ்சினி எஸ். எட்வேட் றட்ணகுமார், பா. மரிசால், பா. தர்ம பாலன், சுதா. டேவிட், செல்வி. பொன்றேஸ் சீமான் சேவியர் யே. அன்ரன், யோசவ், அ. யோண்சி, அ. சூரி. கா. அலன்ரின் எஸ். ஜெனெய்டா, த, சின்னராணி, வின்சன் அன்ரனற் அனுபா, R. W, M. புளோறிடா ராஜிக்கா.

பரிசுபெறும் நற்பேருளர்

ச. நீ. மதிவதனன்

யா/வயாவிளான் ம. ம. வி.

வயாவிளான்

## சிந்தனைக்கு...

★ நாங்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறோமா? அல்லது வாழ முயன்று கொண்டிருக்கிறோமா?

★ பேசும் ஊமைகளை இந்த உலகம் பிரசவித்திருக்கிறதா என்று பார்.

## 1-ம் வருட நினைவஞ்சலி



மரியான் மத்தியாஸ்

மண்ணில்: 21-09-1917 விண்ணில்: 11-05-1988

வாழும்வரை வாழவைத்து
வளர்த்தெடுத்து எமை
அன்பில்
ஆளுபவராய் இருந்தீர்
எங்கள் எண்ணமதில்
மட்டுமன்று
என்றென்றும் நித்தியமாய்
விண்ணிறைவன் பொன்
னடியில் வாழுக

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 11:05-89 வியாழன் காலை 7-00 மணிக்கு கொழும்பு புனித செபஸ்தியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இவரின் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி எலிசபெத்,
மகன், மகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

இல: 74/2, அப்துல் அமீட் வீதி
கொழும்பு - 12. A/110

கரம்பன்

## அன்னை வேளாங்கண்ணி திருவிழா

### 22-05-1989 — 31-05-1989

வழிபாடுகள் மாலை 5 மணிக்கு செபமாலையுடன் ஆரம்பமாகும்.

31 -ம் திகதி திருநாள் திருப்பலி காலை 6-30 மணிக்கு யாழ் ஆயர் அவர்களின் கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்படும்.

மறையுரைகளை வழங்கி வழிநடத்துபவர் இ. ஜே. அருமைநாயகம் அடிகள்.

22-5-89 —யாத்திரைத் தலங்களும், திருவிழாக்களும் —திருச்சபையில்
23-5-89 —மரியே அன்பில் எம்மை வளரவிடு
24-5-89 —அம்மா கற்றுத்தா —மரியே சொல்லித்தா
25-5-89 —துன்ப வேளையில் துயர்துடைப்பாய் -நீ
26-5-89 —தியாகத்தின் தாயே திடம் தருவாயே
27-5-89 —அருள் நிறை மரியே நீ ஓர் அர்ச்சியசிட்ட மரியே
கரம்பன் செபஸ்தியார் ஆலயத்திலிருந்து செபமாலைப் பேரணி
28-5-89 —லூர்துபதியிலிருந்து கரம்பன் வரை — அவளின் கதை
29-5-89 —மரியே மனம்திரும்ப மனம் தாராய்
30-5-89 —திருவிருந்து ஓர் அருமருந்து
31-5-89 —மீண்டும் சந்திப்போம்- தாயே

அன்னையின் அருள் வரங்களைப்பெற அனைவரையும் திரண்டு வருக என அன்புடன் அழைக்கிறோம்.

கரம்பன் பங்குத்தந்தை

வாசகர் கருத்து

## சமகாலப் பிரச்சினை ஆய்வு

கடந்த 26-03-89 இல் வெளியான ஈஸ்டர் சிறப்பு மலரில் இடம்பெற்ற விடயங்கள் அத்தனையும் சிறப்புமிக்கவை. குறிப்பாக கட்டுரைகள், கவிதைகள் யாவும் ஒன்றையொன்று மிஞ்சும் வண்ணம் கருத்தாழம் மிக்கவையாக மிளிர்ந்தமை பாராட்டுதற்குரியது.

தொடர்ந்து வெளியான இரண்டு இதழ்களிலும் இடம்பெற்ற சிறுகதைகளான, எஸ். தெலோமியின் ''பெண்மைக்குள் உண்மை'' —, வே. சாமுவேலின் ''சம்மி மீண்டும் உயிர்பெறுகிறாள்'' ஆகியவை குறிப்பிடத்தக்க அம்சங்கள் பொதிந்தவை எனலாம். சமூகத்தில் ஊறிப்போயிருக்கும் சாபக்கேடான சிலவரன் முறைகளுக்கு சாவு மணியடிக்கும் கருப்பொருள்கள் அக்கதைகள் மூலம் வெளிப்படுகின்றன. வெறும் பொழுது போக்கிற்காக எழுதுவதையும், வாசிப்பதையும் தவிர்த்து, சிந்தனையைத் தூண்டி சமகாலப் பிரச்சினைகளை யதார்த்த ரீதியில் அணுகி ஆய்வு செய்யும் இத்தகைய படைப்பாளிகளை உருவாக்குவதில் ''பாதுகாவலன்'' பெரும்பங்கு வகிக்கிறது என்பது வெள்ளிடை மலை.

கத்தோலிக்கருக்கு மட்டுமல்லாது, பிறருக்கும் ஒளி நல்கும் சுடரே! இளமை குன்றா வளத்துடன் என்றும் நீ மிளிர்வாயாக.

நவாலியூர் சிறில் சுகந்தரன்

## விண்ணக வாழ்வில் 6ஆம் மாத நினைவு



செல்வன் M. மரியநாயகம்
யூட் சக்காறியாஸ்


பிறப்பு: 28-12-70 இறப்பு: 26-11-88

', ஆண்டவரில் உன்
இன்பத்தை தேடு அப்போது
உன் நெஞ்சம் நாடுவதை
அவர் உனக்கு தருவார்''

அன்னாரின் ஆன்மசாந்திக்காக 26-5-89 வெள்ளிக்கிழமை காலை 6-15 மணிக்கு யாழ். பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்
பெற்றோர் சகோதரர்.
A/109

## ஆறுவது ஆண்டு நினைவஞ்சலி



குருசுமுத்து அன்ரனிப்பிள்ளை

மலர்வு: 26-9-1935 உதிர்வு: 27-5-1983

சீவியத்தில் நேசித்தவர்களே
மரணத்திலும் மறவாதீர்கள்
பிரிவால் வாடும்
மனைவி, தாய், சகோதர,
சகோதரிகள்.

நாரந்தனை மேற்கு A/112

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாவலன்
PATHUKAVALAN

## இலவச மருத்துவப்பணியும் கருத்தரங்கும்

மே, 5 திங்கள் அன்று யாழ் வட்டத்திலுள்ள "திருச்சிலுவைக் கன்னியரும், மற்றும் இரு மருத்துவர்களும், அவர்களுக்கு உதவியாக இன்னும் சில தாதியர்களும் உட்பட 9 பேர் பூநகரிப்பகுதியிலுள்ள வலைப்பாடு பங்கைச் சேர்ந்த சில பின்தங்கிய கிராமங்களுக்கு இலவச மருத்துவப் பணியை மேற்கொள்ள வருகை தந்திருந்தார்கள் இவர்களின் மருத்துவ உதவியைப் பெற்ற கிராமங்கள் பின்வருவன: வலைப்பாடு வேரவில், பொன்னுவெளி, கிராஞ்சி, முழங்காவில், நாச்சிக்குடா என்பன. இக்கிராமங்களில் வாழும் 1000க்கும் அதிகமான வயோதிபர், வளர்ந்தோர், கர்ப்பிணித்தாய்மார், சிறுவர் குழந்தைகள் போன்றவர்கள் தத்தம் நோய்களுக்கு ஏற்றாற் போல் மருத்துவ உதவிகளைப் பெற்றுக் கொண்டார்கள். அது மட்டுமல்லாமல் வளர்ச்சி குன்றி உடல் மெலிந்துள்ளவர்களுக்கும், போஷாக்கின்மையான கர்ப்பிணித் தாய்மாருக்கும், சத்துள்ள மருந்து வகைகளும், பால்மா, சவர்க்காரம் போன்றவைகளும் கொடுக்கப்பட்டதுடன், நோய்கள் தோன்றுவதற்கான காரணிகளும், அவைகளைத் தடுப்பதற்குரிய வழிமுறைகளும் பற்றியும் விளக்கி கருத்தரங்கு ஒன்றும் நடாத்தப்பட்டது. இதில் முக்கியமாக சுகதேகியான ஒரு பிள்ளையை வளர்த்தெடுப்பது எப்படி? சுகாதாரமாக மனிதன் வாழ்வதெப்படி? என்பன பற்றியும், தெளிவாக விளக்கம் தரப்பட்டது இன்னும் கிராமப்புறங்களில் வாழுபவர்கள் உடனடி மருத்துவ முதலுதவிகளைச் செய்து, நோயாளிகளைக் காப்பாற்றும் முறைகள் பற்றியும், ஆரம்பத்திலே நோய்கள் வராமல் தடுக்கக்கூடிய சில தடுப்பு முறைகளான உணவு. உடை, உறைவிடம் போன்றவைகளில் பெற்றோர் முக்கிய கவனமெடுத்தல் அவசியம் என்றும் கருத்தரங்கில் சில ஆலோசனைகளையும் எடுத்துரைத்தார். இவர்களின் தன்னலமற்ற சேவையால் இப்பகுதியில் வாழும் வசதி வாய்ப்பற்ற மக்கள் வெகு நன்மையை அடைந்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இம்மருத்துவக் குழுவினர் தங்குவதற்கான உறைவிடம், உணவு முதலிய ஏற்பாடுகளை பங்குத்தந்தையர்களான மறைத்திரு. ஜெயக்குமார் அடிகளும், மறைத்திரு. பற்றிக் ஞானப்பிரகாசம் அடிகளும் முன்னின்று தேவைகளைப் பூர்த்தி செய்து வைத்தார்கள். இவர்களுக்கு உதவியாக வலைப்பாட்டு மரியாயின் சேனையாரும் தங்கள் பங்களிப்பை நல்கினார்கள்.

தகவல்: திருமதி சைமன்.
வலைப்பாடு.

## மைல்கல் கண்ட பலன்

இலங்கைத் திருச்சபை வரலாற்றில் முக்கிய மைல்கல் என எம்மால் வர்ணிக்கப்பட்ட பொதுநிலையினர் கழக கருத்தரங்கு பேராயர் தலைமையில் பிலியந்தலையில் சென்ற வெள்ளிக்கிழமை (மே. 19.) ஆரம்பமாகியது.

சென்ற திங்கள் கிழமை நண்பகல் கருத்தரங்கு முடிவடையும்போது அதன் தீர்மானத் தொகுப்பு வாசிக்கப்பட்டது "இன்று இலங்கையில் உள்நாட்டுத் திருச்சபையாக இருப்பது' என்ற தலைப்பு இடப்பட்டதை ஆட்சேபித்து யாழ். ஆயர் தமது விளக்கத்தைக் கொடுத்தார். கருத்துப் பரிமாறல்களின்பின் "பொதுநிலையினரின் நோக்கில் இன்று இலங்கையில் உள்நாட்டுத் திருச்சபையாக இருப்பது" (Being a local church in Sri Lanka today from the perspective of the laity) என்று மாற்றப்பட்டது.

ஒன்பது மறைவட்டங்களின் ஆயர்களும், பத்து மறைவட்ட ஆணைக்குழுத் தலைவர்களும் பங்குபற்றிய இக்கருத்தரங்கில் திருமலை மட்டுநகர் பொதுநிலையினர் பிரதிநிதிகளாக T. T. பிரான்சிஸ், L. அலெக்சாண்டர் I. சகாயமரியானும் மன்னாரிலிருந்து எமில் குலாஸ், M. டேவிட், ஜேக்கப் பெஞ்சமினும். யாழ்ப்பாணத்திலிருந்து A. C. செபநாயகம், மேரி யோசவ், C. A. S. செல்வநாயகம் ஆகியோரும் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

## மனித மகத்துவத்துக்கு அளிக்கப்படும் மதிப்பு மனித நலனுக்கு அடிப்படையானது

மனித உரிமைகளைக் காப்பதற்கும் மனித நலனுக்காகவும் அதிகாரம் பயன்படுத்தப்பட வேண்டும் என யேசு சபைக் குருவானவரும் மெய்யியலாளருமான முட்ஜி சுட்றிஸ்னோ பெப்ரவரி 22-ம் திகதி ஜகர்த்தாவில் இடம்பெற்ற கருத்தரங்கொன்றில் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது.

அரசின் மூலம் செலுத்தப்படும் அதிகாரம் சர்வாதிகாரமானதாகவும் மனித உரிமைகளை மீறுவதாகவும் மாறிவிடக்கூடும்.

அதே சமயத்தில் அளவு மீறிய அதிகாரம் மக்களிடம் இருந்தால் அது குழப்பத்துக்கும் அராஜகத்திற்கும் இட்டுச் செல்லக்கூடும்.

நியாயமான சட்டமுறைமையினாலும், விமர்சிக்கும் சுதந்திரத்தினாலும், உண்மையான ஜனநாயகத்தினாலும் அதிகார துர்ப்பிரயோகம் தடுக்கப்படவேண்டும்.

அரசியல், பொருளாதார, கலாசார அமைப்புகளெல்லாம் மனித மகத்துவத்திற்கு மதிப்பளித்தால் அதன் விளைவாக சமாதானம் நிலவும்.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் இத்தகைய போக்கு காணப்படுகின்றதென்றும் பிரசில், ஆர்ஜென்ரீனா, பெரு, நிக்கரகுவா போன்ற இடங்களில் சர்வாதிகார, அடக்குமுறைகள் விழ்ச்சியுற்றது இதைக் காட்டுகிறது என்றும் கூறினர்.

## திருவுளச்சீட்டின் மூலம் தெரிவு

மல்லாகம் புதுமைமாதா ஆலய பங்கில் ஆவியானவரின் விழா சிறப்பாகவும் பக்தியுடனும், பயன்தரக்கூடிய வகையில் நடந்தேறியது. விழாவிற்கு ஆயத்தமாக பங்கிலுள்ள 9 இல்லங்களை திருவுளச்சீட்டின் மூலம் தெரிவுசெய்து 5 ஆம் திகதி தொடக்கம் 13 ஆம் திகதி வரையும் தினமும் மாலையில் பஜனையும், செபவழிபாடும் நடத்தப்பட்டது. இவ்வழிபாடுகளில், பங்கிலுள்ள அனைவரும் ஆர்வமுடன் இவ்வில்லங்களில் ஒன்றுகூடி ஒருமனப்பட்டவர்களாகச் செபித்தது, மிகவும் பாராட்டுதற்குரியது. சில வழிபாடுகளில் இந்து மத சகோதரர்களும், நோயாளிகளும் கலந்து ஆவியானவரின் அருள் வரங்களைப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. இறுதியில் 14-ம் திகதி ஞாயிறு தூய ஆவியானவரின் பெருவிழாத் திருப்பலி அருட்தந்தை நேசநாயகம் அடிகளால் ஒப்புக் கொடுக்கப்பட்டது. விழாவை சிறப்பாக நடாத்திய சுவாமி ஞானப்பிரகாசர் மன்றத்தினர், திருப்பலியின்போது ஆவியானவரின் ஆற்றலால் தாம் துணிவுடன் உண்மைக்காக, நீதிக்காக உழைப்போம் என்றும், கிறிஸ்துவின் சாட்சிகளாக வாழ்வோம் என்றும் கூறி தம்மை அர்ப்பணித்தனர். மேற்படி நிகழ்ச்சிகள் யாவும் பங்குத்தந்தை அவர்களின் வழி நடத்தலுடனும் மறை ஆசிரியர் திரு. S. ஆரோக்கியநாதர் அவர்களின் பயிற்சியுடனும் நடைபெற்றன.

தகவல்:- உதயம்

## சிறுபான்மையினர் கல்விநிலையங்களில் கேரள அரசின் தலையீடு

கேரள அரசினால் தமது பாடசாலைகளுக்கு இழைக்கப்படும் தொல்லைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக கிறிஸ்தவ, முஸ்லிம் தலைவர்கள் சங்கனாச்சேரியில் ஒன்றுகூடினர் இம் மாநிலத்தின் 69.9 வீத கல்விநிலைக்கு கிறிஸ்தவ பாடசாலைகளே காரணம் எனக் கருதப்படுகிறது.

ஏறக்குறைய 60 கிறிஸ்தவ, முஸ்லிம் பாடசாலை முகாமையாளர்கள் பேராயர்மார் யோசவ் பொவதில் அவர்களது இல்லத்தில் கூடி அரசின் செயலைக் கண்டித்தனர். பேராயர் அலெக்சாந்தர் மார்தோமா, குயிலன் ஆயர் ஜோசவ் பெர்னாண்டஸ், திருவனந்தபுரம் துணை ஆயர் லாரன்ஸ் மார் தோட்டம், புனலூர் ஆயர் மத்தியாஸ் கபில் ஆகியோரும் அங்கு சமூகமளித்தனர்.

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளுக்கு அனுமதிக்கப்படுவோரில் 80 வீதமானவர்களை அரசே தெரிவு செய்வதையும், பல்கலைக் கழக கல்லூரி அதிபர்களாக நியமிக்கப்படுவோர் 25 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும் என்பதையும் எதிர்த்தே இக்கூட்டம் நடைபெற்றது. தனியார் கல்வி நிலையங்களில் அரசு தலையிடுவது சிறுபான்மையோர் கல்விநிலையங்களைப் பாதிக்கும் என அவர்கள் அஞ்சுகின்றனர்.

1957-ல் ஆட்சிக்கு வந்த நம்பூதிரிபாத் கம்யூனிஸ்ட அரசாங்கமும் கிறிஸ்தவ முஸ்லீம் பாடசாலைகளைத் தாக்கியது. கிறிஸ்தவர்களின் கடுமையான எதிர்ப்பு காரணமாக அந்த அரசாங்கம் பின்னர் ஜவகர்லால் நேருவின் மத்திய அரசினால் கலைக்கப்பட்டுவிட்டது தெரிந்ததே.

## அதிபருக்கு இரங்கல் அஞ்சலி

மன்/நானாட்டான் மகாவித்தியாலயத்தில் 12 வருடங்களாக அரும்பெரும் சேவை புரிந்த காலம் சென்ற கொத்தணிஅதிபர் திரு. ரி. சிமியோன் அவர்களின் ஓராண்டு நினைவஞ்சலி தினத்தைப் பாடசாலை மாணவர்கள், அதிபர், ஆசிரியர்கள் நினைவு கூர்ந்தனர். இரங்கற் திருப்பலி அருள்தந்தை ஸ்ரனிஅன்ரனி அ. ம. தி. அடிகளாரினால் ஒப்புக்கொடுக்கப்பட்டது. இரங்கற் கூட்டத்தில் நானாட்டான் உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். வி. சிவலிங்கம் அவர்களும், அருள்தந்தை அடிகளாரும் நானாட்டான் திருக்குடும்ப கன்னியர் மடத்தலைவி சங். சகோ. பசில் அவர்களும், நானாட்டான் பகுதி கிராம சேவகர்கள், பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்களும் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கதாகும்.

தகவல்:- க. ஜெ.

## மனமாற்றத்திற்கு விவிலிய அழைப்பு

இறையன்பு இல்லாமல் போகும்போது மனிதருள் பிரிவினையும் துன்பங்களும் அதிகரித்துள்ளன என்பதை கருவாகக் கொண்டு நான்கு நாட்கள் தொடர்ச்சியாக "விவிலிய ஞானஒடுக்கம்" யாழ். அடைக்கலநாயகி மண்டபத்தில் நடைபெற்றது.

கடந்த வெள்ளிக்கிழமை (19-5-89) ஆரம்பமாகிய இந்நிகழ்ச்சிக்கு கொழும்பிலுள்ள கத்தோலிக்க நற்செய்திப்பணியாளர்களான சகோதரன் ஸ்ரான் டிவோட்டா, சகோதரன் பெஞ்சமின் ஆகியோர் மக்களின் மனமாற்றத்திற்கு விவிலியத்தின் அழைப்பு சம்பந்தமாகவும், இறையன்பு மனிதரில் நிறைவைக் கொடுப்பது எப்படி என்றும் முழுவேதாகம அடிப்படையில் உரைகள் நிகழ்த்தினர்கள்.

அடைக்கலநாயகி நற்செய்தி அகம் ஒழுங்குசெய்த இந்நிகழ்ச்சிக்கு யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளரான வண. பிதா. ஆர். ஜே. ஈ. ஜெயசீலன் தலைமை வகித்தார்.

சுமார் அறுபது பேர் வரை கலந்துகொண்ட இந்நிகழ்ச்சியில் பெண்கள் அதிகமாகக் காணப்பட்டனர். இந்நிகழ்ச்சி யாழ். நகரில் மூன்றாவது தடவையாக நடைபெற்ற போதிலும், ஏனைய இடங்களுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளதாக அடிகளார் தெரிவித்தார்.

—எட்வர்ட் லியோன்-

### ஊக்குவிப்பு

இவ்வாரம் 6550 பாதுகாவலன் பிரதிகள் அச்சிடப்படுகின்றன. உங்கள் பங்கில் ஊக்குவிப்பு நடக்கின்றதா?

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1989-ம் ஆண்டு மே மாதம் 26ஆ ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது
பதிவு இல: QB / 1001/58/81

உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org